# CULTURAL HERITAGE OF TAMIL NADU

**UNIT-I**

Introduction: Definition - Cultural Heritage - Tamilagam Early Period: Sangam Age - Sathavahana Pallava - Chalukya - Chola - Pandya Periods - Art - Architecture.

# பண்பாட்டுப் பாரம்பரியம் – ஓர் அறிமுகம்

**முன்னுரை**

இந்தியாவில் பிறக்கும் குழந்தை பல்லாயிரம் ஆண்டுகளின் பண்பாட்டுப் பாரம்பரியப் பின்னணியில் பிறந்து வளர்கின்றது. இந்தியா பல மொழிகள் பேசும், வேறுபட்ட பல கலாச்சாரங்களைக் கொண்ட பல இன மக்கள் வாழும் நாடு ஆகும். பல்வேறு கலைகள், இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றில் சிறப்புப் பெற்ற கலைவாணர்கள், இசைஞானிகள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் போன்றோர் பலர் வாழ்ந்த பூமியாகும்.

தத்துவ ஞானிகள், முனிவர்கள், மாமன்னர்கள், போர் வீரர்கள், தியாகச் செம்மல்கள், சமூகச் சீர்த்திருத்தவாதிகள் தூயதுறவிகள் ஆகியோர் வாழ்ந்த சமுதாய மரபுகளைப் பின்பற்றி இங்கு பிறந்து வாழும் குழந்தைகள் வளர்கின்றனர். பராம்பரியங்கள் யாவும் குழந்தைக்குச் சமுதாயத்தில் தகுதி நிலையை ஏற்படுத்தித் தருகின்றன. இப்பண்பாட்டுப் பாரம்பரியம், அக்குழந்தை தான் அடைந்த கற்றல் அடைவுகளினால் தன்னம்பிக்கையைப் பெற்று, எதிர்காலத்தில் தான் அடையவேண்டிய இலக்கினையும் நிர்ணயம் செய்து தருவனவாக அமைகின்றன. பள்ளியின் வாயிலாக, நம் சமூக மரபுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் குழந்தைகள் உணர்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு பள்ளியும் நம்முடைய சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு மாற்றம் செய்யும் உன்னதப் பணியை நிறைவேற்றுகின்றன

இந்தியக் கலைகள், இலக்கியம், சட்டம், வரலாறு ஆகியவை நம் பண்பாட்டின் முக்கியக் கூறுகள் ஆகும். ஒவ்வொரு இந்திய மாணவனும், இந்நாட்டின் வரலாற்றுப் பின்னணியை முழுமையாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும். நம்முடைய தேசத்தின் சுதந்திரத்திற்கு அயராது பாடுபட்டவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும், நம்முடைய நாகரிக முன்னேற்றத்திற்கு அடிகோலியவர்கள் பற்றியும், வேத வித்தகர்கள், முனிவர்கள், யோகியர்கள் ஆகியோர் பற்றியும் தெரிந்து கொள்ள

வேண்டும். இது நம் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொலை நோக்காக அமையும்.

### சமுதாயமும் பண்பாடும்

பண்பாடு என்பது சமுதாயம் வாழும் முறையை விளக்குவது. இது உணவு உட்கொள்ளும் முறை, ஆடைகள் அணியும் விதம், மொழியாளும் திறன், அறிவுடைமை, விளையாட்டுத் திறன் ஆகியவற்றை உள்ளடக்கியது. மனிதனுடைய பண்பாட்டைப் பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன. எனவே பண்பாடு என்பது தனிமனிதனின் அல்லது ஒரு குழுவினரின் எண்ணங்களாலும் செயல்களாலும் அமையும்.

### பண்பாட்டின் வகைப்பாடு

பண்பாடு என்பது இயற்கையின் மீதும், தன் மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு, மனிதனுடைய உடை, ஆயுதங்கள், கருவிகள், மறைவிடம், ஆன்மீகம், மொழி, இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கியது என்று எல்வுட் மற்றும் பிரௌன் (ElWood and Brown) ஆகியோர் கூறுகின்றனர். இவர்கள் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு எனப் பாகுபடுத்தி ஆய்கின்றனர்.

### பொருள் சார்ந்த பண்பாடு

மனிதர்கள் உருவாக்கும் கட்டுமானப் படைப்புகள், வசதிகள், வாய்ப்புகள் கருவிகள் இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால், அவற்றால் கிடைக்கும் நிம்மதியால் நடைமுறை, பழக்கவழக்கங்களால், இயல்புகளால் நன்மைகளால் மனிதர்கள் பண்பட்டவர்களாக வாழ்கின்றனர் இது பொருள் நலம் சார்ந்த பண்பாடு எனப்படுவதாகும்.

### பண்பாட்டின் சிறப்பு இயல்புகள்

மனிதன் தன்னுடைய தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாடு என சி. சி. நார்த் (C.C. North) குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சமுதாயத்தின் அல்லது ஒருநாட்டின் பண்பாடு, காலச்சூழலுக்கேற்ப வளரும் தன்மை கொண்டது. இவ்வளர்ச்சிப் பாதையில், பயன்படக்கூடிய, ஒப்புக் கொள்ளப்பட்ட விரும்பத்தக்க, சமுதாயத்திற்கேற்ற, தேவையான கூறுகள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மற்றவைகள் காலப்போக்கில் விலக்கப்பட்டுவிடும். பண்பாடு ஒரு

குறிப்பிட்ட சமுதாயத்தின் குறிப்பிட்ட காலத்தின் வேலையாக மட்டுமன்றிப் பன்னெடுநாளைய வளர்ச்சியைக் கொண்ட ஒன்றிணைந்த திரட்டாக வளர்ந்த வண்ணமுள்ளது எனலாம். பல்வேறு காலக்கட்டங்களில் ஒருபூபாகத்தில் மனித இனம் கண்ட அனுபவங்கள், அதற்கு அவர்கள் செய்த இடைவினைகள், அங்கு ஏற்பட்ட நன்மை, தீமைகள் சீர்திருத்தங்கள், சமூக பொருளாதார, அரசியல், கலாச்சாரம் அனைத்துமே அப்பண்பாட்டில் ஐக்கியப்பட்டு நிற்கின்றன என்பதே உண்மை.

மனிதனுடைய இயற்கை உந்து உணர்வுகளான பசி, சேர்ந்து வாழ்தல், பாதுகாப்பு உணர்வு, போன்றவைகள் உலகம் முழுவதும் ஒன்றாக இருப்பினும், அவைகள் வெளிப்படும் முறை வேறுபட்டுக் காணப்படுகின்றன. பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் பற்பல மாற்றங்களைக் கொண்டு மாறிவரினும் உளம்சார் பண்பாடு அடியோடு மாறாமல் உயர்வு, சிறப்பு, நன்மை, அறம் போன்ற உட்கூறுகளைச் சிறிதும் பின்வாங்காமல் பின்பற்றி போற்றியே வருகின்றமை கண்கூடு.

சமூக வாழ்வில் நிகழும் கண்டுபிடிப்புகள், மாற்றங்கள் காரணமாக ஒரு குழுவினரின் பண்பாட்டு மாற்றங்கள், பிற குழுவினருக்கும் கசிந்து பரவும் தன்மையுடையன. தொலைக்காட்சி, வானொலி, விமானம், செய்தித்தாள் ஆகிய கண்டுபிடிப்புகளால் நம்முடைய பண்பாட்டுக் கூறுகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன.

மனிதன் பிறக்கும் போதே மரபுக் குணமாக உயிரியல் அடிப்படையில் அமையும் பண்பாடு மாற்றப்படுவதில்லை. பல மனிதர்களுடன், குழுவுடன் ஏற்படும் தொடர்பு வாயிலாகவும் மனிதன் பண்பாட்டைக் கற்றுக் கொள்கின்றான். பண்பாடு தனிபட்டு இருக்கவியலாதது. சமூகத்தின் ஒட்டு மொத்தத் தன்மையைப் பண்பாடு பிரதிபலிக்கும். சமூக இடைவினை மூலம் பண்பாடு தோன்றி வளர்கின்றது. எந்த மனிதனும், பிற மனிதர்களுடன் பங்கு கொள்வதன் மூலமே பண்பாட்டைப் பெற முடியும்.

சமூகவியல் அடிப்படையில் பண்பாடு என்பது பிறருடன் பகிர்ந்து கொள்வதைக் குறிப்பிடும். நம்முடைய பழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள், கொள்கைகள், எண்ணங்கள், மதிப்புக்கள் எல்லாமே மக்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டவையே ஆகும். ஆரியபட்டர் கண்டுபிடித்தவை, காளிதாசரின் இலக்கியங்கள், ஆதிசங்கரர், விவேகானந்தர் அருளிய தத்துவங்கள், இரவிவர்மாவின் ஒவியங்கள் முதலானவை பகிர்வே எனலாம்.

மனித இனத்தினுடைய கடந்தகால நிகழ்கால மற்றும் எதிர்கால அடைவுகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியையே பண்பாடு எனும் சொல் குறிப்பதாகும். ஆகவே பண்பாடு பல நூற்றாண்டுகளாக ஒரு தலைமுறையிடமிருந்து மறு தலைமுறைகளுக்கு மரத்தின் வேர் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருப்பது போல் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றது.

பண்பாடு, நம்முடைய தேவைகளையும், விருப்பங்களையும் மனநிறைவுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு வழிகாட்டி வாய்ப்பளிக்கின்றது. நம்முடைய உணவு,உடை,உறைவிடம் மற்றும் பதவி பணம், புகழ், எல்லாம் பண்பாட்டின் வழியாகவே நிறைவேறுகின்றன. மனிதனுடைய செயல்களை நிறைவேற்ற பண்பாடு வழிகாட்டுகின்றது. ஆகவே பண்பாட்டின் வாயிலாக மனிதன் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றான்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட பண்பாடு உள்ளது. அவை ஒரு சமுதாயத்திற்கே உரிய தனித்தன்மைகளைப் பெற்றவை. பண்பாட்டுக் கூறுகளான பழக்கம், எண்ணம், தத்துவம், நம்பிக்கை ஆகியவை சமுதாயத்திற்கு ஏற்ப மாறுபடும் தன்மை உடையன. காலத்திற்கு ஏற்பவும் மாறும். எந்த ஒரு பண்பாடும் மாறாத் தன்மை உடையதாக இருக்க முடியாது.

**பண்பாட்டின் தன்மைகள்**

ஜார்ஜ்பீட்டர் முர்டாக் (George Peter Murdock) பண்பாட்டின் தன்மைகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

மனிதன் பண்பாட்டுடன் பிறப்பதில்லை. சூழலோடு வாழ, அவனைப் பொருத்திக் கொள்ள உதவும் ஒரு கற்றல் முறையே பண்பாடு.

பண்பாடு ஒருவரிடமிருந்து, மற்றவர்க்கு தலைமுறை, தலைமுறையாக மாற்றப்படுகிறது.

ஒவ்வொரு சமூகத்திற்கும், தனியான பண்பாடு உள்ளது. ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சார்ந்து வாழ்கின்றனர். இது சமுதாயத்தை ஒரு கட்டுக்குள் வைக்க உதவுகின்றது.

பண்பாடு முன்னோர்களின் சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. முன்னோர்களிடமிருந்து அவற்றைப் பெற்று, அதன் வழி மனிதன் வாழ வகை செய்கின்றது.

சூழ்நிலையிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொள்ளப்பண்பாடு முயல்கின்றது. பல்வேறுபட்ட பண்பாடுகள், சமூகத்தில் இடைவினை

புரிகின்றன அவற்றில் நல்ல கருத்துக்களை சமூகம் ஏற்றுக் கொண்டு முழுமையான ஒன்றிணைந்த ஒரு பண்பாடாக உருப் பெறுகின்றது.

மனிதர்கள் தங்களுடைய எண்ணங்கள், நடத்தைகள், மற்றும் செயல்களைத் தொடர்ந்து தெளிவுப்படுத்தவும், மெருகேற்றவும் செய்கிறார்கள். இதற்குப்பண்பாடு உதவுகின்றது.

பண்பாடு மனிதனின் புதிய தேடல்களுக்கு, புதியத் தேவைகளுக்கும் அவன் இறக்கும் வரை உதவுகின்றது.

மனிதன் ஒரு சமூக விலங்கு, அவன் சூழ்நிலையின் கைதி; ஆயினும் நன்னெறிகளின் சிற்பியாகவும் பண்பாட்டின் காவலனாகவும் திகழ்கிறான். பண்பாடு, மனிதன் சமூகத்தில் வாழ அரண் செய்து உதவுகின்றது. பண்பாடு மனிதனை, மனிதனாக உயர்த்துகின்றது.

**ஆளுமையை உருவாக்குவதில் பண்பாட்டின் பங்கு**

நாடக நடிகர்கள், மேடையில் நடிக்க நுழையும் போது அணியும் முகமூடி' (Mask) என்ற பொருள் தரக்கூடிய 'பெர்சன் (Person) என்ற கிரேக்கச் சொல்லிருந்து ஆளுமை எனப் பொருள்படும், Personality எனும் ஆங்கிலச் சொல் பெறப்பட்டது. நாடக நடிகர்கள் ஏற்றுநடிக்கும் பாத்திரங்களுக்கேற்ப முகமூடியும் மாறும். ஏற்றுநடித்தல் (Role Playing) என்பது பண்பாட்டுடன் தொடர்புடையது. மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை, தொழில், மனித உறவுகள், திருமணம் என்ற மூன்று சமூக நிறுவனங்கள் மற்றும் செயல்களின் வழியாக நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு மனிதனும் இம் மூன்று செயல்களிலும் வெற்றிபெற விழைகின்றான். இவ்விழைவே ஆளுமையை உருவாக்குகின்றது. இவ்வாறு ஆளுமை, பண்பாட்டைத் தீர்மானிக்கின்றது.

மொழியைக் கற்றுத் தரவும், விரும்பத்தகாதது, நல்லவை, கெட்டவை போன்றவற்றை வேறுபடுத்திப் பார்ப்பதற்கும், ஆளுமையின் அடிப்படைகளைப் பெறவும் குடும்பம் உதவுகின்றது. பள்ளியும் ஒத்த குழுவும் வெவ்வேறு பண்பாட்டு சூழலில் இருப்பினும், அவை தனித்தன்மை வாய்ந்த ஆளுமை வளர்ச்சிக்கு, குடும்பத்திற்கு அடுத்தபடியாகப் பேருதவி செய்கின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றிச் சென்று, இடைவினைபுரியும் போது வெற்றி அல்லது தோல்வியை அடையலாம். தோல்வி அடையும் போது, குறையை அறிந்து திருத்திக் கொள்ளவும், புதிய விதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும், ஆளுமை வளர்ச்சியை அடையவும், குடும்பம், பள்ளி ஆகியவை உதவிட முடியும்.

**பண்பாடும் கல்வியும்**

ஒரு நாட்டின் பண்பாட்டில் முழுமையாக இசைந்து வாழ, அப்பண்பாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை விதிகளைப் பற்றிய விழிப்புணர்வை அதன் உறுப்பினர்கள் பெற்றிருக்க வேண்டும். கல்வியின் வாயிலாக, குழந்தைகளும், சமுதாயத்தின் புதிய உறுப்பினர்களும் பண்பாட்டுச் செய்திகளைப் பெற்று, அதன் சூழலோடு வாழ முயல்கின்றனர். அதாவது, பண்பாட்டின் இயல்புகளை மனிதனுக்கு அறிமுகப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி அதோடு இசைந்து வாழச் செய்வதும், கல்வியின் முக்கியப் பணியாகும்.

**பண்பாடும், பள்ளியும்**

தன்னுடைய இளம் உறுப்பினர்கள் நாகரிக அறியாமையில் இருப்பதைச் சமுதாயம் விரும்புவதில்லை. சமூகம், பண்பாடு, சமயம் மற்றும் பிறதுறைகளில் அடைந்த அடைவுகளை அடுத்த தலைமுறைக்கு மாற்றவேண்டிய கடமை சமுதாயத்திற்கு உள்ளது. சமுதாயம் சிக்கலுறும் போதும் அறிவு தடைப்படும் போதும், சமுதாயம் முறையான கல்வியின் தேவைகளை உணர்கிறது.

**பள்ளியால் வளர்க்கப்பட வேண்டிய பண்பாட்டு நோக்கங்கள்**

1) பண்பாட்டுப் பாரம்பரியத்தை மாற்றம் செய்தல்

2) பண்பாட்டுப் பாரம்பரியத்தை மேம்படுத்துதல்

3) பண்பாட்டைப் பாதுகாத்தல்

4) பண்பாட்டைத் தூய்மைப்படுத்துதல்

**பண்பாட்டை மேம்படுத்துதல்**

சமுதாய நிலைகளைப் பிரதிபலிப்பதோடு நில்லாமல், சமுதாயத்தை மேம்படுத்துவதும் வேகமாக வளர்ந்து வரும் உலகத்தோடு பொருந்தி வாழவும், சமுதாயத்தின் தேவைப்படாத புதிய கருத்துக்கள் நம்மை அணுகாமல் பாதுகாத்துக் கொள்ளவும், பண்பாடு வழிகாட்ட வேண்டும். கண்மூடித்தனமாக, புதிய வளர்ச்சிகளைப் பின்பற்றாமல், கல்வி வழியாக, கடந்த காலத்தை மதிப்பிட்டு, நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு, எதிர்காலத்தைச் சந்திக்கத் தயாராக இருத்தல் வேண்டும். மாணவர்கள் கடந்த கால உன்னத எண்ணங்களால் தூண்டப்பட்டு, வலிமை மிக்க

நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ள கல்விப் பண்பாட்டுப் பராம்பரியத்தை மேம்படுத்த வேண்டும்.

**பண்பாட்டைப் பாதுகாத்தல்**

எதிர்கால இந்தியப் பண்பாட்டின் தொடர்ச்சியும், உயிரோட்டமும் இளைஞர்கள் கைகளில் உள்ளது. நம் பண்பாட்டின் புகழை, மதிப்பை, தவிர்த்து அல்லது கவனிக்கத் தவறி, பிறநாட்டுப் பண்பாட்டினை சிந்திக்காமல், சீர்தூக்கிப் பார்க்காமல் அப்படியே ஏற்று அதில் மயங்கி, மோகங் கொண்டிருப்பது நம் நாட்டின் முன்னேற்றங்களைத் தடைப்படுத்தும். ஆகவே நம் உயிருக்கு காப்பீடு செய்து நம் சந்ததியினரைக் காப்பாற்றுவது போல், நம் மூதாதையர்கள், மகான்கள், அறிஞர்கள், சீர்திருத்தவாதிகள், தத்துவ ஞானிகள், சித்தர்கள், முனிவர்கள் கட்டிக் காத்த பண்பாட்டுக் கலாச்சாரப் பாரம்பரியத்தை, இளம் தலைமுறையினரும் நிலையாக, உறுதியாக, நலத்துடன் பாதுகாக்கக் கல்வி உதவிட வேண்டும்.

பண்பாட்டைத் தூய்மைப்படுத்தல், பண்பாட்டைப் புனரமைப்பு செய்து சீரமைத்துப் புதியதோர் உலகை, சமுதாயத்தை உருவாக்கும் அரிய பொறுப்பு கல்விக்குள்ளது.

**இந்தியக் கலைகள்**

நீண்ட, நெடிய 10000 ஆண்டு கால இந்தியப்பண்பாடு, வரலாறு, பல நாகரிகங்களைக் கடந்து, உள்வாங்கி உலகப்புகழ் படைத்த பண்பாடு ஆகும். நம்மக்கள், அவர்களின் வாழும் முறை, நடன, இசை மற்றும் கலைகள் ஆகியவை நம் பண்பாட்டின் உயிர் மூச்சு என்பதை நமக்கு எடுத்துரைக்கின்றன. ஆயகலைகள் அறுபத்திநான்கும் இம்மண்ணில் தோன்றி வளர்க்கப்பட்டன. அவைகளாவன

**ஆயகலைகள் அறுபத்து நான்கு**

அகூடிர இலக்கணம்
பூபரீசைரஷ
இலிகிதம்
சங்கிராம இலக்கணம்
கணிதம்
மல்யுத்தம்
வேதம்
ஆகரஷணம்

புராணம்
உச்சாடனம்
வியாகரணம்
வித்து வேஷணம்
நீதி சாஸ்திரம்
மதன சாஸ்திரம்
சோதிட சாஸ்திரம்
மோகனம்
தர்ம சாஸ்திரம்
வசீகரணம்
யோக சாஸ்திரம்
ரசவாதம்
மந்திர சாஸ்திரம்
காந்தர்வவாதம்
சகுண சாஸ்திரம்
பைபீலவாதம்
சிற்ப சாஸ்திரம்
கௌத்துகவாதம்
வைத்திய சாஸ்திரம்
தாதுவாதம்
உருவ சாஸ்திரம்
காரூடம்
இதிகாசம்
நட்டம்
காவியம்
முஷ்டி
அலங்காரம்
ஆகாயப்பிரவேசம்
மதுரபாடனம்
ஆகாய கமனம்
நாடகம்
பரகாயப்பிரவேசம்
நிருத்தம்
அதிர்ஷயம்
சப்தபிரமம்
இந்திரஜாலம்
வீணை
மகேந்திரஜாலம்

வேணு
அக்கினித்தம்பம்
மிருதங்கம்
ஜலஸ்தம்பம்
தாளம்
வாயுத்தம்பம்
திட்டித்தம்பம்

பரதநாட்டியம், கதகளி, குச்சுபுடி, குட்டியாட்டம், மோகினியாட்டம், மணிப்புரி, ஒடிசி போன்ற பல்வேறு நாட்டியங்கள் மாநிலத்திற்கு ஏற்ப அமைந்து, அங்கு வாழும் மக்களின் பண்பாட்டை, பாரம்பரியத்தை விளக்குகின்றன.

பரத நாட்டியம் என்பது தமிழ்நாட்டின் சிறப்பு நடனம் ஆகும். பரத முனிவர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அவர் நாட்டிய சாத்திரம்' என்ற நூலில் பரத நாட்டியத்தை வெகுவிவரமாகச் சித்தரித்துள்ளார். இதன் மூலக்கூறுகள் தொல்காப்பியத்திலும் காணப்படுவதாக மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வுரை எழுதியுள்ளார்.

பரத நாட்டியம், ராகம் (Raga) தாளம் (Tala) பாவம் (Bhava) என்ற மூன்று அம்சங்களைக் கொண்டது. கை, கால், முகம் மற்றும் உடல் அசைவுகளை ஒருங்கிணைத்து, 64 கோட்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் நடனமாடப்படுகிறது.

### பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கும் வழிகள்

பலவிதமான கலாச்சாரங்கள், பண்பாடுகள், வழிபாட்டு முறைகள், வாழ்க்கை முறைகள், உடை, உணவு பழக்க வழக்கங்கள், பேசும் மொழிகள் ஆகியவற்றில் இந்திய மக்கள் வேறுபட்டு இருப்பினும் ஆன்மீக உணர்வு, எளிய வாழ்வு, உயரிய சிந்தனை, விருந்தோம்பல், கலை உணர்வு, அழகுணர்வு, சமயச் சார்பற்ற தன்மை, மக்களாட்சி ஆகியவற்றில் இந்தியர்கள் என்ற உணர்வும், ஒற்றுமையும் பெற்று வாழ்ந்து உலகிற்கு முன்னோடியாக வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்கிறோம். இப்பண்பாட்டு ஒற்றுமையை பாடப்பொருளுடன் இணைத்தும், பிணைத்தும் ஆசிரியர்கள் கற்றல் அனுபவங்களாக்கி வகுப்பில் வழங்க வேண்டும். பின்வரும் வழிகளையும் பின்பற்றலாம்.

குழந்தைகளின் பங்கேற்புடன் பொறுப்புக்களை ஒப்படைத்து, அதன் வழியாக அவர்கள் விரும்பும் வண்ணம், பண்பாட்டு விழாக்களை அவர்களின் குழுக்களைக் கொண்டே வழிகாட்டுதல்.

குழந்தைகளிடம் மிகுதியாகக் காணப்படும் ஆர்வங்களை நல்வழியில் ஆற்றுப்படுத்தி, அவர்களின் ஈடுபாட்டுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும், மறப்போம், மன்னிப்போம் என்ற மேதக்க போக்கையும் வளர்த்தல்.

முகாம்கள், மலையேற்றம், தோட்டம் அமைத்தல். நடைப்பயணம் போன்றவற்றை நடத்திப் பண்பாட்டு உறவுகளை மேம்படுத்தல்.

குழுநடனம், நாடகம் நடித்தல், மண் உருவங்கள் செய்தல், குழுவாகப் பாடல், நூல் நூற்றல், துணி நெய்தல் முதலானவற்றை நடத்தி நம் பண்பாட்டை வலுப்படுத்தச் செய்தல்.

மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, கூட்டுறவு மனப்பான்மையை ஏற்படுத்திப் பண்பாட்டை வளர்க்கலாம். மேலும் விளையாட்டு விதிகளை மதித்து நடந்து கொள்வதுபோல், நம்பண்பாட்டையும் மதிக்கக் கற்றுக் கொள்ளவும், அதன் வழிநடக்கவும் வழிகாட்டல்.

பிறகுழந்தைகளுக்கு இடர் ஏற்படும்போது அவர்களிடம் அன்பு பாராட்டி, உதவிட வழி காட்டுவதன் வாயிலாக நம் இந்தியப் பண்பாட்டின் உள் இழையான அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் என்ற அருள் உணர்வை வளர்த்தல். இராமலிங்க அடிகள் “வாடிய பயிரைக் கண்டபோதல்லாம் வாடினேன்" என்று “ஆருயிர்க்கெலாம் அன்பு செயல் வேண்டும்” பாடிய முழுப் பாடல்களை என்றும் மாணவர்கள் உணர்வுடன் பாடிப் பழகிடச் செய்தல். நாமக்கல் கவிஞரின் 'சூரியன் வருவது யாராலே" என்ற பாடலைப் பண்ணோடு இசைக்கப் பழக்குதல்.

ஒவ்வொரு நாளும் பலசமயக் கோட்பாடுகளை வலியுறுத்தும் கூட்டு சமய வழிபாட்டுக்கு வழிவகுத்தளித்தல்.

பள்ளியின் அமைவிடத்தைச் சூழ்ந்துள்ள தேசிய, மாநில, மாவட்ட மற்றும் கிராம முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டு இடங்களுக்குக் களப்பயணம் மேற்கொள்ளுதல்.

பிற மதத்தவர்களின் பண்டிகைக் காலச் செயல்பாடுகளின் பின்னணியில் உள்ள சரியான உட்கருத்துக்கள் நோக்கங்களை மாணவ ஆசிரியர்கள் அறிதல், தெளிதல்.

தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் பண்பாட்டுச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்தல். பண்பாட்டுக் கருத்துக்களையொட்டிய கருத்தரங்கு, வினாடி-வினா, விவாதம் போன்றவற்றைப் பயிற்சிப் பள்ளிகளில் நடத்துதல்.

நம்நாட்டு மகான்கள், சித்தர்கள், ஞானிகள், ஆன்மீகவாதிகள், வரலாற்றுச் சிறப்புப் பெற்றோர் ஆகியோர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கச் செய்தல்.

பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களிப்பதோடு நின்றுவிடாமல், அவற்றைப் பேணிக் காக்கவும் வேண்டும்.

ஆசிரியர் மன்ற நிகழ்ச்சிகளிலும், இலக்கியமன்ற விழாக்களிலும், ஆண்டுவிழாவிலும் கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கிராமிய நடனம், கரகம், நாடகம், நாட்டியம்

முதலிய கலைநிகழ்ச்சிகளைப் பண்பாட்டுக்கேற்ற வகையில் நடத்துதல் போன்றவைகளாகும்.

## தமிழர் பண்பாடு

தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்களின் பண்பாடு ஆகும். தமிழ் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது. தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புற கலை, தற்காப்பு கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள், அறிவியலை வெளிப்படுத்தப்படுகிறது மற்றும் தொழில்நுட்பம். தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே.

"தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று, அதனளவில் சார்புடையது (culture dependent). மற்றறொன்று, உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருந்தக்கூடியது (culture independent). அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூடிய 'புறக் கூறுகள்' பண்பாடு சார்ந்தும், அவற்றின் 'அகக் கூறுகள்' உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும்."

பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. முன்னது 'அகக்கூறு ' பின்னது 'புறக்கூறு'. நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு , நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு . தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது.

பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது, தமிழர் பண்பாடு இதுவல்ல என்று தெளிவாக வரையறுப்பது கடினமாகினும் ஒரு அறிவுசார் மதிப்பீடு செய்ய முடியும். எடுத்துக்காட்டாக யூத சமயமோ, சீக்கிய சமயமோ தமிழர் பண்பாட்டு வட்டத்துக்குள் வரமாட்டா. மாறாகச் சைவ சமயத்துக்குத் தமிழர் பண்பாட்டுடன் ஒரு இறுகிய தொடர்பு உண்டு.

# தமிழகத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலம்

**பழைய கற்காலம்**

தமிழ்நாட்டின் பகுதிகளில் பழங்கற்கால குடியிருப்புகள் இருந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதியானது கி.மு 500,000 ஆண்டிலிருந்து கி.மு 3000 ஆண்டு வரை நீடித்திருந்ததாக மதிப்பிடப்படுகிறது. பழங்கற்காலத்தின் பெரும்பாலான காலகட்டங்களில் இப்பகுதியில், அடர்த்தியற்ற காட்டுப் பகுதிகள் அல்லது புல்வெளி சார்ந்த சுற்றுச்சூழலில் அமைந்த ஆற்றுப் பள்ளதாக்குகளுக்கு அருகிலேயே மனிதர்கள் வாழ்ந்து வந்தனர். இந்தப் பகுதிகளில் மக்கட்தொகை அடர்த்தி மிகக் குறைவாக இருந்தது ஆகையால் தென்னிந்தியாவில் இரண்டு இடங்களில் மட்டுமே தொடக்க பழங்கற்கால கலாச்சாரம் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சென்னையின் வடமேற்கு பகுதியில் உள்ள அத்திரம்பாக்கம் பள்ளதாக்கு இந்தப் பகுதிகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டின் வடக்குப் பகுதிகளைச் சுற்றி பழங்கற்காலத்திய விலங்குகளின் புதைப்படிமங்கள் மற்றும் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளதாக தொல்லியல் சார்ந்த ஆய்வுகள் கூறுகின்றன. இவை கி.மு 300,000 ஆண்டு காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். தென்னிந்தியாவில் வாழ்ந்த மனிதர்கள் பெரும்பாலும் பண்டைய "பழங்கற்காலத்தில்" நீண்ட காலம் வாழ்ந்த ஹோமோ எரக்டஸ் இனத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும் இவர்கள் கைக்கோடரி மற்றும் வெட்டுக்கத்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி வேட்டையாடி சேகரித்து வாழும் மக்களாக இருந்தனர்.

50,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தற்கால மனித இனத்தின் (ஹோமோ செப்பியன்ஸ் செப்பியன்ஸ்) மூதாதைய இனத்தினர் மிகவும் மேம்பட்ட நிலையிலும், பல்வேறு கற்களைப் பயன்படுத்தி தகடு போன்ற கருவிகள் மற்றும் மெல்லிய நுண்தகடு கருவிகளையும் உருவாக்கி

பயன்படுத்தியிருந்தனர். சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நுண்கல் கருவிகள் என்று அறியப்படும் இன்னும் சிறிய கருவிகளை மனிதர்கள் உருவாக்கினர். சூரிய காந்தக் கல், அகேட் கல், சிக்கிமுக்கி கல், குவார்ட்ஸ் கல் போன்ற பொருள்களைப் பயன்படுத்தி நுண்கற்கள் கருவிகளை மனிதர்கள் உருவாக்கினர். 1949 ஆம் ஆண்டில், இது போன்ற நுண்கல் கருவிகளை திருநெல்வேலி மாவட்டத்தில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நுண்கற்கள் காலமானது கி.மு 6000-3000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகும் என தொல்லியல் துறை ஆய்வுகள் கூறுகின்றன.

### புதிய கற்காலம்

தமிழ்நாட்டில் சுமார் கி.மு 2500 ஆண்டு புதிய கற்காலம் தொடங்கியது. சாணைபிடித்தல் மற்றும் மெருகேற்றல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி புதிய கற்காலத்தைச் சேர்ந்த மனிதர்கள் தங்கள் கற்கருவிகளுக்கு நயமான வடிவம் அளித்தனர். பண்டைய எழுத்துக்களைக் கொண்ட புதிய கற்காலத்தைச் சேர்ந்த கோடரியின் மேற்பகுதி தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய கற்கால மனிதர்கள் பெரும்பாலும் சிறிய சமதளமான மலைகள் அல்லது மலையின் அடிவாரத்தில், சிறிய, ஏறத்தாழ நிரந்தரமான குடியிருப்புகளில் வாழ்ந்தனர். மேய்ச்சல் காரணங்களுக்காக அவ்வப்போது அவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்தனர். அவர்கள் இறந்தவர்களை பள்ளங்கள் அல்லது புதைகலங்களில் புதைத்து சடங்குகளை முறையாகச் செய்தனர். அவர்கள் ஆயுதங்கள் மற்றும் கருவிகளை உருவாக்க தாமிரத்தைப் பயன்படுத்தவும் தொடங்கினர்.

### இரும்புக் காலம்

இரும்பைப் பயன்படுத்தி ஆயுதங்கள் மற்றும் கருவிகளை வடிவமைக்கும் முறையை மனிதர்கள் இரும்புக் காலத்தின் போது தொடங்கினர். பல நூறு இடங்களில் காணப்படும் பெருங்கற்களாலான இடுகாடுகளைக் கொண்டு தீபகற்ப இந்தியாவில் இரும்புக் காலக் கலாச்சாரம் இருந்ததை அறிய முடிகிறது.[8] இடுகாடு நினைவுச் சின்னங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு மற்றும் அவற்றின் வகைகளைக் கொண்டு வடக்குப் பகுதியிலிருந்து தெற்குப் பகுதிக்கு இரும்புக் கால குடியேற்றங்கள் பரவியதாகத் தெரிகிறது. திருநெல்வேலி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூர் மற்றும் இந்தியாவின் வடக்கு பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாய்வுகளை ஒப்பிடும் போது பெருங்கற்களாலான

குடியேற்றங்கள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்ததற்கான அடையாளங்கள் கிடைத்தன.

சுமார் கி.மு 1000 வது ஆண்டைச் சேர்ந்த பெருங்கற்களாலான புதைகல இடுகாடுகள் இருந்ததற்கான தெளிவான முற்கால அடையாளங்கள் இடுகாடுகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன, குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 24 கி.மீ தொலைவில் இருக்கும் ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் தொல்பொருள் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் பூமியிலிருந்து 157 புதைகலங்களை அகழ்ந்தெடுத்தனர். அவற்றில் 15 கலங்களில் மனிதனின் மண்டை ஓடு, எலும்புக் கூடுகள் மற்றும் மற்றும் எலும்புகள், உமி, அரிசி தானியங்கள், கருகிய அரிசி மற்றும் புதிய கற்கால கோடரிக் கருவி ஆகியவற்றைக் கொண்டிருந்தன. கண்டெடுக்கப்பட்டுள்ள புதைகலத்தில் எழுத்தப்பட்ட எழுத்துகள், 2800 ஆண்டுகளுக்கு முந்தைய புதிய கற்காலத்தின் தமிழ்-பிராமி வரிவடிவத்தை ஒத்திருப்பதாக இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தொடர்ந்து அகழ்வாய்வு சோதனைகளை மேற்கொள்ளுவதற்கான தொல்லியல் களமாக ஆதிச்சநல்லூர் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொதுவான காலத்திற்கு முந்தைய தமிழ்நாட்டின் அரசியல் நிலவரம் பற்றிய குறிப்புகள், கி.மு 300 ஆண்டைச் சேர்ந்த அசோகரின் சாசனத்திலும் கி.மு 150 ஆண்டைச் சேர்ந்த கதிகும்பா கல்வெட்டிலும் (ஓரளவு) கண்டறியப்பட்டுள்ளது. மிகப் பழைய வட்டெழுத்து ரீதியான சான்றில் தமிழ் நாட்டில் இருந்த ஆட்சி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன, அதில் பாண்டிய நாட்டிலிருந்து களப்பிரர்களை வெளியேற்றிய பாண்டிய அரசன் கடுங்கோன் (c.560–590 CE) என்பவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது

## சங்க காலம்

சங்க காலம் என்பது பண்டைய தென்னிந்திய வரலாற்றில் நிலவிய தமிழகம் தொடர்பான ஒரு காலப்பகுதியாகும். இக்காலப்பகுதி கிமு ஆறாம் நூற்றாண்டில் இருந்து கிபி இரண்டாம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. மதுரையை மையமாகக் கொண்டு தமிழ்ப்புலவர்கள் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தனர் என்ற காரணத்தால் இக்காலப்பகுதிக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முற்காலத் தமிழ் மொழியில் தமிழகம் என்ற சொல் 168 ஆவது புறநானூற்றுப் பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தமிழகம் என்று குறிக்கப்பட்ட இப்பகுதி முழுவதுமாக தமிழ்மொழி பேசும் மக்கள் வாழும் பகுதியாகும். தற்பொழுது இப்பிரதேசம் தோராயமாக தற்காலத் தென்னிந்தியா என்பதாக அறியப்படுகிறது. இத்தென்னிந்தியப் பகுதியில் தமிழ்நாடு, கேரளா , ஆந்திரப்பிரதேசம் சில பகுதிகள், கர்நாடக மாநிலத்தின் சில பகுதிகள், இலங்கை முதலிய பகுதிகளும் அடங்கும்.

**வரலாறு**

தென்னிந்திய புராணங்களில் காணப்படும் கூற்றுகளின்படி, முற்காலத் தமிழகத்தில் தலைச் சங்கம், இடைச் சங்கம் மற்றும் கடைச் சங்கம் ஆகிய மூன்று சங்கங்கள் இருந்ததாக நம்பப்படுகிறது. இம்முச்சங்கங்களில் மூன்றாவது சங்க காலமான கடைச்சங்க காலத்தையே வரலாற்றாசிரியர்கள் சங்ககாலமாக எடுத்துக் கொள்கின்றனர். முதல் இரண்டு சங்கங்களும் புராணங்களில் புகழ்பெற்று வாழ்பவை என்றே கருதுகின்றனர். ஒவ்வொரு சங்கத்திலும் அச்சங்க காலத்திற்கென சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்டு தோற்றம் கண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. கல்வெட்டுகள், சங்க இலக்கியங்கள், மற்றும் தொல்பொருள் தரவுகள் ஆகியவையே தென்னிந்தியாவின் ஆரம்ப கால வரலாற்று ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

பண்டைய தமிழ்நாட்டில், வேந்தர் என அழைக்கப்பட்ட அரசர்களின் தலைமையின் கீழ் இருந்த மூன்று முடியாட்சி மாநிலங்களும் வேள் அல்லது வேளிர் என்ற பட்டப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட பல பழங்குடி இனத் தலைவர்களின் தலைமையில் இருந்த பழங்குடி இனக் குழுக்களும் இருந்தன. இவர்களுக்கும் அடுத்ததாக, உள்ளூர் பகுதிகளின் இனக் குழுக்களின் தலைவர்கள் இருந்தனர், இவர்கள் கிழார் அல்லது மன்னர் என அழைக்கப்பட்டனர். கி.மு மூன்றாம் நூற்றாண்டின் போது தக்காணப் பீடபூமி மௌரியப் பேரரசின் ஒரு அங்கமாக இருந்தது. கி.மு முதல் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை இந்த பகுதி சாதவாகனர் வம்சத்தினரால் ஆளப்பட்டது. வடக்கு பகுதியைச் சேர்ந்த இந்தப் பேரரசுகளின் கட்டுப்பாட்டிலிருந்து தமிழ் பகுதி தன்னிச்சையாக இருந்தது. தமிழ் அரசர்கள் மற்றும் குழுத்தலைவர்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் அவர்கள் சண்டையிடுவது இடங்களுக்காகவே. அரசனின் நீதிமன்றங்கள் ஆற்றலைப் பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக சமூக நிகழ்வுகளுக்கான மையங்களாக இருந்தன. அவை வளங்களைப் பகிர்ந்தளிக்கும் மையங்களாக இருந்தன. ஆட்சியாளர்கள் படிப்படியாக வட

இந்தியார்களின் ஆதிக்கம் மற்றும் வேதக் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இவைகள் ஆட்சியாளரின் நிலையை மேம்படுத்த பலி கொடுக்கும் பழக்கத்தையும் ஊக்குவித்தன.

அசோகப் பேரரசின் கீழ் இல்லாத பேரரசுகள் மற்றும் இந்தப் பேரரசுடன் நட்பு நிலையில் இருந்த பேரரசுகள் பற்றிய தகவல்கள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்ந்து சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் சேரர்களின் வம்சங்கள் (கி.மு 273-232) அசோகத் தூண்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தமிழ் பேரரசுகளின் கூட்டமைப்பைபற்றி கி.மு 150 ஆண்டைச் சேர்ந்த கலிங்கப் பேரரசை ஆட்சி செய்த அரசன் கார்வேலனின் ஹத்திகும்பா கல்வெட்டு, குறிப்பிடுக்கிறது.

முற்கால சோழர்களில் கரிகாலச் சோழன் மிகப் புகழ்பெற்றவராக இருந்தார். சங்க இலக்கியங்களின் பல்வேறு செய்யுள்களில் கரிகாலச் சோழன் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னாளில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் நூலில் வரும் பல்வேறு கதைகளிலும் கரிகாலன் பற்றிய செய்திகள் முக்கிய பொருளாக இருந்தது. மேலும் 11 மற்றும் 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் மற்றும் கல்வெட்டுகளிலும் கரிகாலன் பற்றிய தகவல்கள் உள்ளன. இமாலயம் வரையிலான இந்தியா முழுவதையும் வென்றவன் எனவும் நிலமானியங்களைக் கொண்டு காவேரி ஆற்றின் வெள்ளத்தை தடுப்பதற்காக கரைகளைக் கட்டியவன் எனவும் இந்த நூல்கள் விளக்குகின்றன. சங்க இலக்கியங்களில் இந்த தகவல்கள் இல்லை என்பதால் இந்த வரலாறு பற்றி வெளிப்படையாக தெரிவதில்லை. சோழர்களில் மற்றொரு புகழ்ெற்ற மன்னன் கோச்செங்கண்ணன் ஆவான். சங்க கால இலக்கியப் பாடல்கள் பலவற்றில் அவனைப் பற்றி புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. இடைக்காலத்தின் போது சைவ அறிவாளராகவும் கருதப்பட்டார்.

இந்திய தீபகற்பத்தின் தென்கோடிப் பகுதியான கொற்கையிலிருந்து முதலில் ஆட்சி செய்ய தொடங்கிய பாண்டியர்கள் பின்னாளில் மதுரை நகருக்கு மாறினர். சங்க இலக்கியத்திலும் பாண்டியர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதே காலத்தில் இருந்த கிரேக்க மற்றும் உரோமானிய ஆவணங்களிலும் பாண்டியர்கள் பற்றி உள்ளது. மெகஸ்தனிஸ், இந்திகா என்ற தனது நூலில் பாண்டியப் பேரரசு பற்றி குறிப்பிட்டுள்ளார். மதுரையின் தற்போதைய மாவட்டங்கள், திருநெல்வேலி மற்றும் தெற்கு கேரளாவின் சில பகுதிகளை பாண்டியர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பாண்டியர்கள் கிரேக்கம் மற்றும் உரோம்

ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்பையும் கொண்டிருந்தனர். பாண்டியர்கள் தமிழகத்தின் மற்ற பேரரசுகளுடன் இணைந்து ஈழத்தின் தமிழ் வணிகர்களுடன் வணிக மற்றும் திருமணத் தொடர்பையும் கொண்டிருந்தனர். சங்க இலக்கியங்களின் பல்வேறு பாடல்களில் பாண்டிய மன்னர்கள் பலர் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்களில் 'தலையாலங்கானம் வென்ற' நெடுஞ்செழியன் மற்றும் தியாகச் செயல்களுக்கான சிறப்பான ஒருவராக குறிப்பிடப்படும் ஆரான் முதுகுடுமி பெருவழுதி என்ற மற்றொரு நெடுஞ்செழியன் ஆகியோர் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அகநானூறு மற்றும் புறநானூறு போன்ற தமிழ்நூல்களின் தொகுப்புகளில் உள்ள சிறிய பாடல்கள், மதுரைக் காஞ்சி மற்றும் நெடுநல்வாடை போன்ற இரண்டு முக்கிய நூல்களிலும் (பத்துப்பாட்டு தொகுப்புகளில் உள்ளது) சங்க காலத்தில் பாண்டிய பேரரசில் மேற்கொள்ளப்பட்ட சமூக மற்றும் வணிக ரீதியான செயல்கள் பற்றிய செய்திகள் உள்ளன. மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் களப்பிரர்களின் ஊடுருவல் காரணமாக முற்காலப் பாண்டியர்களின் புகழ் மறைந்து போனது.

தென்னிந்தியாவின் மலபார் கடற்கரை அல்லது அதன் மேற்கு பகுதியுடன் இணைந்த, தற்போதைய கேரள மாநிலம் ஆகியவை ஒன்றிணைந்த பகுதியாக சேரர்களின் பேரரசு இருந்தது. கடல் வழியாக ஆப்பிரிக்காவுடன் வாணிகம் செய்வதற்கு ஏற்ற வகையில் அவர்களின் இருப்பிடம் இருந்தது. இந்தியாவின் மாநிலமான கேரளாவில் உள்ள இன்றைய மக்கள், பண்டையக் காலத்தில் தங்கள் பகுதியை ஆட்சி செய்த சேரர்கள் பேசிய மொழியே பேசுகின்றனர். மேலும் தமிழ் நாட்டின் பிற பகுதிகளுடனும் இவர்கள் பரவலான தொடர்பு கொண்டிருந்தனர். இது ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு வரை மட்டுமே வழக்கத்தில் இருந்தது, இதன் பிறகு தமிழ் மொழியில் வடமொழியின் தாக்கம் காரணமாக மொழியின் தனிப்பட்ட அங்கீகாரம் மாறி புதிய மொழி ஒன்று பயன்பாட்டிற்கு வந்தது.

பழமையான இலக்கியங்கள் தமிழில் வளர்வதற்கு இந்த முற்கால பேரரசுகள் ஆதரவளித்தன. சங்க இலக்கியம் என்று அறியப்படும் செவ்வியல் இலக்கியம் கி.மு 200 முதல் 300 ஆம் ஆண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்ததாக அறியப்படுகிறது. சங்க இலக்கியத்திலுள்ள பாடல்கள் பெரும்பாலும் உணர்வு மற்றும் பொருள் சார்ந்த தலைப்புகளையே கொண்டுள்ளன. இடைக்காலத்தில் இவைகள் வகைப்படுத்தப்பட்டு பல்வேறு தொகை நூல்களாக திரட்டப்பட்டுள்ளன. செழுமையான நிலம் மற்றும் பல்வேறு தொழில் சார்ந்த மக்கள் குழுக்கள்

பற்றியே இந்த சங்கப் பாடல்கள் சித்தரிக்கின்றன. இந்த பகுதிகளை ஆட்சி செய்வது பரம்பரை குடியாட்சி முறையில் இருந்தது. எனினும் இந்த பகுதிகளின் செயல்பாடுகள் மற்றும் ஆட்சி செய்பவரின் ஆற்றல் ஆகியவை முன்பே இயற்றப்பட்ட ஒழுங்குமுறைகளை (தர்மம்) பின்பற்றியே இருந்தது. மக்கள் தங்களின் அரசரிடம் மிகவும் விசுவாசமாக இருந்தனர். உலகம் சுற்றும் புலவர்களும் இசைக்கலைஞர்களும் நடனக் கலைஞர்களும் தாராள மனமுடைய அரசனின் அவைகளை அலங்கரித்தனர். இசை மற்றும் நடனக் கலைகள் மேம்பட்டு புகழ்பெற்றிருந்தன. சங்ககாலப் பாடல்களில் பல்வேறு வகையான இசைக் கருவிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தன. தெற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதி நடனங்களை ஒருங்கிணைத்து புதிய வகை நடனம் ஆடுவது இந்த காலத்தில் தான் தொடங்கியது. இந்த வகை நடனங்கள் காப்பியமான சிலப்பதிகாரத்தில் முழுமையாக வெளிப்பட்டு இருந்தது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகம் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு இயக்கத்தில் இருந்தது. தொல்லியல் துறை ஆய்வுகள் மற்றும் இலக்கியங்களில் யுவனர்களுடனான வெளிநாட்டு வணிகம் செழுமையாக இருந்தததைக் கூறுகின்றன. தென்னிந்தாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் இருந்த முசிறி மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதியின் துறைமுக நகரம் பூம்புகார் ஆகிய இரு இடங்களில் ஏராளமான கப்பல்கள் நிறுத்தப்பட்டு வெளிநாட்டுப் பொருள்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்து வணிக மையங்களாக விளங்கின. இந்த வணிகம் இரண்டாம் நூற்றாண்டிற்கு பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது. மேலும் உரோமானிய அரசுக்கும் பண்டைய தமிழ் நாட்டிற்கும் இருந்த நேரடி உறவு அரபியர்கள் மற்றும் கிழக்கு ஆப்ரிக்காவை சேர்ந்த ஆக்சுமைட்களின் நேரடி வணிகத்தால் சிதைவுறத் தொடங்கியது. உள்நாட்டு வணிகம் சிறப்பாக இருந்தது, பொருள்கள் வாங்குவது மற்றும் விற்பது பண்டகமாற்று முறைப்படி நடந்தது. பெரும்பாலான மக்களுக்கும் அதிக நிலங்களைக் கொண்டிருந்த பரம்பரை விவசாயிகளான வெள்ளாளர்களுக்கும் விவசாயம் தலைமைத் தொழிலாக இருந்தது.

## இலக்கியச் சான்றுகள்

பழந்தமிழகத்தின் வரலாறு, தமிழர்களின் சமூக-அரசியல் சூழல் பண்பாட்டு வழக்கங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் உள்ளடங்கிய சொத்துக்களாக இலக்கியம் மற்றும் கல்வெட்டுகள் திகழ்கின்றன. வரலாற்றுக்கு முந்தைய காலம், தொன்மைக் காலம், இடைக்காலம் என்று மூன்று காலப் பிரிவுகளாகப் தமிழக வரலாறு பிரிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசியத்தின் சமூக-அரசியல் மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் புரிதலை

வழங்குகின்ற வகையில் உலகெங்கிலும் உள்ள இலக்கியங்களும், கல்வெட்டு ஆதாரங்களும் திகழ்கின்றன.

**சங்க கால சமூகம்**

ஐந்து வகை நிலப்பிரிவுகள் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

- குறிஞ்சி, மலையும் மலைசார்ந்த பகுதி
- முல்லை, மேய்ச்சல் காடுகள்
- மருதம், வேளாண் நிலங்கள்
- நெய்தல், கடற்கரைப் பகுதி
- பாலை, வறண்ட பூமி

இந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் தத்தம் கடவுளர்களையும் தொழில்களையும் பெற்றிருந்தனர்.

1. குறிஞ்சி – முதன்மைக் கடவுள் முருகன் (தொழில்: வேட்டையாடுதல், தேன் எடுத்தல்)

2. முல்லை – முதன்மைக் கடவுள் மாயோன் (விஷ்ணு) (தொழில்: ஆடு, மாடு வளர்ப்பு, பால் பொருட்கள் உற்பத்தி)

3. மருதம் – முதன்மைக்கடவுள் – இந்திரன் ( தொழில்: வேளாண்மை)

4. நெய்தல் – முதன்மைக்கடவுள் – வருணன் (தொழில்: மீன் பிடித்தல், உப்பு உற்பத்தி)

5. பாலை – முதன்மைக் கடவுள் – கொற்றவை (தொழில்: கொள்ளையடித்தல்)

**மக்கள் பிரிவு**

தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் அவரவர் வாழ்ந்த திணை நிலத்திற்கு ஏற்பவும், செய்த தொழிலடிப்படையிலும் பெயர் பெற்றனர். அவ்வாறே அவ்வந் நிலத்தலைவர்களும் சிறப்புப் பெயர் பெற்றனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டுவர், குறவர், குறத்தியர் எனவும், குறிஞ்சி நிலத் தலைவன் வெற்பன், சிலம்பன், பொருப்பன் எனவும், குறிஞ்சி நிலத் தலைவன் மனைவி கொடிச்சி எனவும் அழைக்கப்பெற்றனர். முல்லை நிலத்தைச் சார்ந்த மக்கள் இடையர், பொதுவர், ஆயர், ஆய்ச்சியர் எனவும், முல்லை நிலத் தலைவர் அண்ணல், தோன்றல், குறும்பொறை நாடன் எனவும், நிலத் தலைவனின் மனைவி, மனைவி எனவும் அழைக்கப்பெற்றனர். மருத நில

மக்கள் உழவர், உழத்தியர் எனவும், மருத நிலத்தலைவன் ஊரன், மகிழ்நன் எனவும் அத்தலைவனின் மனைவி, மனையோள் எனவும் அழைக்கப்பெற்றனர். நெய்தல் நில மக்கள் திமிலர், பரதவர், நுளையர், நுளைச்சியர் எனவும், நெய்தல் நிலத்தலைவன் சேர்ப்பன், திரையன், பரதவன் மடமகள் எனவும் அழைக்கப்பெற்றனர். பாலை நிலத்தில் வாழும் மக்கள் எயினர், எயிற்றியர் எனவும், பாலை நிலத்தலைவன் மீளி, விடலை எனவும் பாலை நிலத் தலைவனின் மனைவி எயிற்றி எனவும் அழைக்கப்பட்டனர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைக்குரிய மக்களோடு அறிவிலும், ஆற்றலிலும் நாகரிகப்பண்பாட்டிலும் சிறப்புடையவர்களாக விளங்கிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய மக்களும் இருந்தனர்.

பண்டைத் தமிழகத்தில் காணப்படும் பாகுபாடுகள் தொழில் வகையால் அமைந்தவை. பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சாதிப்பாகுபாடு அன்று. பழந்தமிழகத்தில் உணவு, உறவுகொள்ளல் ஆகியவற்றில் வேறுபாடு காணும் சாதிமுறை இல்லை.

நான்கு வகை பிரிவுகள் – அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் – குறித்து தொல்காப்பியம் கூறுகிறது. ஆளும் வர்க்கத்தினர் அரசர் என்றழைக்கப்பட்டனர். சங்க கால அரசியல் மற்றும் சமய வாழ்க்கையில் அந்தணர் முக்கிய பங்கு வகித்தனர். வணிகர்கள் வணிகத் தொழிலில் ஈடுபட்டனர். வேளாளர்கள் பயிர்த் தொழில் செய்தனர். பழங்குடி இனத்தவர்களான பரதவர், பாணர், எயினர், கடம்பர், மறவர், புலையர் போன்றோரும் சங்க கால சமுதாயத்தில் அங்கம் வகித்தனர். பண்டையக்கால தொல்பழங்குடிகளான தோடர்கள், இருளர்கள், நாகர்கள், வேடர்கள் போன்றோரும் இக்காலத்தில் வாழ்ந்தனர்.

**சமயம்**

சங்க காலத்தின் முதன்மைக் கடவுள் முருகன் அல்லது சேயோன் தமிழ்க்கடவுள் என அவர் போற்றப்பட்டார். முருக வழிபாடு தொன்மை வாய்ந்தது. முருகன் தொடர்பான விழாக்கள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அறுபடை வீடுகள் அவனுக்கே உரித்தானவை. மாயோன் (விஷ்ணு), வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை போன்ற கடவுள்களையும் சங்க காலத்தில் வழிபட்டனர். வீரக்கல் அல்லது நடுகல் வழிபாடு சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. போர்க்களத்தில் வீரனது ஆற்றலையும் தியாகத்தையும் போற்றும்

வகையில் அனவது நினைவாக வீரக்கல் நடப்பட்டடது. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மறைந்த வீரர்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய வீரக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நீத்தோர் வழிபாடு மிகவும் தொன்மையானதாகும்.

**மகளிர் நிலை**

சங்க காலத்தில் மகளிர் நிலை குறித்து அறிந்து கொள்ள சங்க இலக்கியங்களில் ஏராளமான தகவல்கள் உள்ளன. அவ்வையார், நச்செள்ளையார், காக்கைபாடினியார் போன்ற பெண் புலவர்கள் இக்காலத்தில் வாழ்ந்து தமிழ் இலக்கியத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர். மகளிரின் வீரம் குறித்து பல்வேறு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கற்பு பெண்களின் தலையாய விழுமியமாகப் போற்றப்பட்டது. காதல் திருமணம் சாதாரணமாக வழக்கத்திலிருந்தது. பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர். இருப்பினும், கைம்பெண்களின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. சமுதாயத்தின் மேல்மட்டத்தில் 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கம் பின்பற்றப்பட்டது. அரசர்களும், உயர்குடியினரும் நாட்டிய மகளிரை ஆதரித்துப் போற்றினர்.

**நுண்கலைகள்**

கவிதை, இசை, நாட்டியம் போன்ற நுண்கலைகள் சங்ககாலத்தில் புகழ்பெற்று விளங்கின. அரசர்கள், குறுநில மன்னர்கள், உயர்குடியினர் போன்றோர் புலவர்களுக்கு தாராளமாக பரிசுப் பொருட்களை வழங்கி ஆதரித்தனர். பாணர், விறலியர் போன்ற நாடோடிப் பாடகர்கள் அரசவைகளை மொய்த்த வண்ணம் இருந்தனர். நாட்டுப்புற பாடல்களிலும் நாட்டுப்புற நடனங்களிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் சங்க காலத்தில் வாழ்ந்தனர். இசையும் நடனமும் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. சங்க இலங்கியங்களில் பல்வேறு வகையிலான யாழ்களும் முரசுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. கணிகையர் நடனத்தில் சிறந்து விளங்கினர். 'கூத்து' மக்களின் சிறந்த பொழுதுபோக்காக திகழ்ந்தது.

**சங்க காலப் பொருளாதாரம்**

வேளாண்மை முக்கியத் தொழில் ஆகும். நெல் முக்கியப் பயிர் கேழ்வரகு, கரும்பு, பருத்தி, மிளகு, இஞ்சி, மஞ்சள், இலவங்கம், பல்வேறு பழவகைகள் போன்றவையும் பயிரிடப்பட்டன. பலா, மிளகு இரண்டுக்கும்

சேர நாடு புகழ் பெற்றதாகும். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் நெல் முக்கிய பயிராகும்.

சங்க காலத்தில் கைத்தொழில்கள் ஏற்றம் பெற்றிருந்தன. நெசவு, உலோகத் தொழில், தச்சுவேலை, கப்பல் கட்டுதல், மணிகள், விலையுயர்ந்த கற்கள், தந்தம் ஆகியவற்றை பயன்படுத்தி ஆபரணங்கள் செய்தல் போன்றவை ஒருசில கைத்தொழில்களாகும். இத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவைகள் இருந்தன. ஏனென்றால் சங்ககாலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பருத்தி மற்றும் பட்டு இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகள் உயர்ந்த தரமுடையதாக இருந்தன. நீராவியைவிடவும், பாம்பின் தோலைவிடவும் மெலிதான துணிகள் நெய்யப்பட்டடதாக சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உறையூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியாடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் தேவை காணப்பட்டடது.

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வர்த்தகம் சங்க கால்தில் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்கள், கிரேக்க – ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இது குறித்த ஏராளமான தகவல்களைத் தருகின்றன. வண்டிகளிலும் விலங்குகள் மேல் ஏற்றப்பட்ட பொதிகளின் மூலமாகவும், வணிகர்கள் பொருட்களை கொண்டுசென்று விற்பனை செய்தனர். உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையின் அடிப்படையிலேயே நடைபெற்றது.

தென்னிந்தியாவிற்கும், கிரேக்க அரசுகளுக்கும் இடையே அயல்நாட்டு வர்த்தகம் நடைபெற்றது. ரோமானியப் பேரரசு தோன்றிய பிறகு ரோமாபுரியுடனான வாணிபம் சிறப்படைந்தது. துறைமுகப்பட்டினமான புகார் அயல்நாட்டு வணிகர்களின் வர்த்தகமையமாகத் திகழ்நததது. விலை மதிப்பு மிக்க பொருட்களை ஏற்றிவந்த பெரிய கப்பல்கள் இந்த துறைமுகத்திற்கு வந்து சென்றன. தொண்டி, முசிறி, கொற்கை, அரிக்கமேடு, மரக்காணம் போன்றவை பிற சுறுசுறுப்பான துறைமுகங்களாகும். அயல்நாட்டு வாணிபம் குறித்து ‘பெரிப்புளூஸ்’ நூலின் ஆசிரியர் பல அரிய தகவல்களைக் கூறியுள்ளார். அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ போன்ற ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட தங்கம் மற்றும் வெள்ளியாலான நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. சங்க காலத்தில் நடைபெற்ற வாணிகத்தின் அளவு மற்றும் தமிழ்நாட்டில் ரோமானிய வணிகர்களின் செயல்பாடுகள் ஆிகயவற்றை இவை வெளிப்படுத்துவதாக உள்ளன. பருத்தியாடைகள், மிளகு, இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், மஞ்சள் போன்ற நறுமணப் பொருட்கள், தந்தவேலைப்பாடு நிறைந்த பொருட்கள், முத்துக்கள் மற்றும்

விலையுயர்ந்த கற்கள் போன்றவை சங்க காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டட பொருட்களாகும். தங்கம், குதிரைகள், இனிப்பான மதுவகைகள் ஆகியன முக்கிய இறக்குமதிகளாகும்.

**சங்க காலத்தின் முடிவு**

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சங்ககாலம் மெல்ல முடிவுக்கு வரத் தொடங்கியது. சுமார் இரண்டரை நூற்றாண்டுகள் தமிழகத்தை களப்பிரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். களப்பிரர்கள் ஆட்சிகுறித்து நமக்கு சொற்ப தகவல்களே கிடைக்கின்றன. இக்காலத்தில் புத்த சமயமும், சமண சமயமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பின்னர் களப்பிரர்களை விரட்டிவிட்டு வடக்கு தமிழ்நாட்டில் பல்லவர்களும், தெற்குத் தமிழ்நாட்டில் பாண்டியர்களும் தத்தம் ஆட்சியை நிறுவினர்.

# சாதவாகனர்

சாதவாகனர் என்போர் தக்காணப் பகுதியில் நிலைகொண்டிருந்த பண்டைய இந்திய அரச மரபினராவர். புராணங்களில் இவர்கள் ஆந்திரர் எனவும் அழைக்கப்பட்டனர். சாதவாகன ஆட்சி கிமு 1-ஆம் நூற்றாண்டு முதல் கிபி 2-ஆம் நூற்றாண்டு வரை இருந்ததாக இன்றைய வரலாற்றாளர்கள் நம்புகின்றனர். வேறு சிலர் கிமு 3-ஆம் நூற்றாண்டு காலம் முதலே இவர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறுகின்றனர். சாதவாகன இராச்சியம் இன்றைய தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. பல்வேறு காலகட்டங்களில் இவர்கள் இன்றைய குசராத்து, மத்தியப் பிரதேசம், கருநாடகம் ஆகிய பகுதிகளையும் ஆண்டனர். இவ்வம்சத்தின் தலைநகராக பிரதித்தானா மற்றும் அமராவதி ஆகிய நகரங்கள் இருந்துள்ளன. கிபி 3-ஆம் நூற்றாண்டில் இவர்கள் சிறிய மாநிலங்களாக சிதறிப் போயினர்.

சாதவாகனர் ஆட்சியில் தமது உலோக நாணயங்களில் ஆட்சியாளர்களின் உருவங்களைப் பொறித்தவர்களில் முதன்மையானவர்கள் ஆவர். இவர்கள் சிந்து-கங்கைச் சமவெளி முதல் இந்தியாவின் தென்முனை வரை கலாச்சாரப் பாலங்களை அமைத்தனர், அவர்களுடனான வணிகத்தில் முக்கிய பங்காற்றினர். பிராமணம் மட்டுமல்லாது, பௌத்தத்தையும் பிராகிருந்த இலக்கியத்தையும் ஆதரித்து வந்தனர்.

**தோற்றம்**

சாதவாகனர்களின் மூலம், மற்றும் ஆண்டு பற்றிய தகவல்கள், பெயர்க்காரணம் ஆகியவை குறித்து இன்றைய வரலாற்றாளர்கள் தமக்கிடையே முரண்படுகின்றனர். பிராந்திய அரசியல் காரணமாக இன்றைய ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம், கருநாடகம், தெலுங்கானா ஆகியன சாதவாகனர்களின் தாய்நாடுகள் என கூறுகின்றமையும் விவாதத்துக்குரியன.

சாதவாகனர் பற்றிய முதலாவது குறிப்பு கிமு 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்ற ஐதரேய பிராமணத்தில் காணப்படுகின்றது. இவர்கள் விசுவாமித்திரரின் வழி வந்தவர்கள் என இப் பிராமணம் கூறுகின்றது. புராணங்களும், இவர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களும் இவர்களை சாதவாகனர், சதகர்ணிகள், ஆந்திரர், ஆந்திரபிரித்தியர் எனப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றன. கிரேக்கப் பயணியான மெகஸ்தெனசின் ஒரு குறிப்பின்படி இவர்கள் 100,000 காலாட்படையும், 1,000 யானைகளும், 30 சிறப்பாக அமைக்கப்பட்டு அரண் செய்யப்பட்ட நகரங்களும் இருந்ததாகத் தெரிகிறது.

**சாதவாகன ஆட்சியாளர்கள்**

சாதவாகனர்கள் குறித்த தொல்லியல் குறிப்புகள் மற்றும் வெளியிட்டா நாணயங்களின் அடிப்படையில் ஹிமன்சு பிரபா ராய் என்பவர் சாதவாக ஆட்சியாளர்களை கீழ்கண்டவாறு குறித்துள்ளார்.

சிமுகன் கி மு 100
கன்கா (கி மு 100 – 70)
முதலாம் சதகர்ணி (கி மு 70 – 60)
இரண்டாம் சதகர்ணி (கி மு 50–25)

சாதவாகனர்களின் இராச்சியம் மேற்கு சத்ரபதிகள் பிடியில் இருந்ததால் கி மு 25 முதல் கி பி 53 முடிய ஒழுங்கான அரசனில்லாக் காலமாக இருந்தது.

நஹபானா (கி பி 54-100)
கௌதமிபுத்ர சதகர்ணி (கி பி 86–110)
வசஸ்திபுத்திர ஸ்ரீ புலமாவி (கி பி 110–138 )
வசஸ்திபுத்திர சதகர்ணி (கி பி 138–145)
சிவ ஸ்ரீ புலமாவி (கி பி 145–152)
சிவஸ்கந்த சதகர்ணி (கி பி 145–152)

யக்ஞ ஸ்ரீ சதகர்ணி (கி பி 152–181)
விஜய சதகர்ணி

சாதவாக இராச்சியத்தின் தென்கிழக்கு தக்காணப் பிரதேச ஆட்சியாளர்கள்:

சந்திர ஸ்ரீ
இரண்டாம் புலுமாவி
ஆபிர ஈசாசேனா
மாத்ரிபுத்திர சகாசேனா
ஹரிபுத்திர சதகர்ணி

## மொழி

சதாவஹன கல்வெட்டுகள் மற்றும் நாணய புனைவுகள் பெரும்பாலானவை மத்திய இந்தோ-ஆரிய மொழியில் உள்ளன. சில நவீன அறிஞர்களால் இந்த மொழி "பிரகிருதம்" என்று அழைக்கப்படுகிறது. ஆனால் "பிரகிருத்" என்ற சொல் பரவலாக வரையறுக்கப்பட்டால் மட்டுமே ஒவ்வொரு மத்திய இந்தோ-ஆரிய மொழியையும் "சரியாக சமஸ்கிருதம் அல்ல" என்று சேர்த்தால் மட்டுமே இந்த சொல் சரியானது என்று கருத முடியும். கல்வெட்டுகளின் மொழி உண்மையில் சமஸ்கிருதத்துடன் நெருக்கமாக உள்ளது, இது சாதவாகன மன்னர் ஹலாவிடம் கூறப்பட்ட கஹா சத்தாசாய் தொகுப்பில் பயன்படுத்தப்படும் இலக்கிய பிரகிருதத்தை விட சத்வஹான்கள் அரசியல் கல்வெட்டுகளிலும் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினர் , ஆனால் அரிதாகவே. ஒரு துண்டுக் கல்வெட்டு நாசிக் அருகில் காணப்படும் prashasti Gautamiputra சதகரணி இன் சமஸ்கிருத வசனங்கள் பயன்படுத்துகிறது வசந்தா-திலகம் மரணமடைந்த ராஜா (அநேகமாக Gautamiputra) விவரிக்க மீட்டர். சன்னதியில் காணப்படும் ஒரு சமஸ்கிருத கல்வெட்டு க ut தமிபுத்ரா ஸ்ரீ சதகர்னியைக் குறிக்கிறது, அதன் நாணயங்களில் ஒன்று சமஸ்கிருத புராணத்தையும் கொண்டுள்ளது.

சாதவாகனர்கள் ஒருபுறம் மத்திய இந்தோ-ஆரிய மொழியையும், மறுபுறம் தமிழ் மொழியையும் உள்ளடக்கிய இருமொழி நாணயங்களையும் வெளியிட்டனர்

## நாணயங்கள்

கௌதமிபுத்ரா சதகர்ணி மன்னர் தொடங்கி, அவர் தோற்கடித்த மேற்கு க்ஷத்திரபர்களின் நடைமுறையிலிருந்து தொடங்கி, தங்கள் ஆட்சியாளர்களின் உருவப்படங்களுடன் தங்கள் சொந்த நாணயங்களை

வெளியிட்ட ஆரம்பகால இந்திய ஆட்சியாளர்கள் சாதவாகனர்கள் வடமேற்கில் உள்ள இந்தோ-கிரேக்க மன்னர்களின் நாணயங்களின் அம்சங்களை மேற்கு சத்ரப்கள் பின்பற்றி வந்தனர்.

டெக்கான் பிராந்தியத்தில் ஆயிரக்கணக்கான ஈயம், தாமிரம் மற்றும் பொட்டின் சதாவஹான நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; ஒரு சில தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களும் கிடைக்கின்றன. இந்த நாணயங்கள் சீரான வடிவமைப்பு அல்லது அளவைக் கொண்டிருக்கவில்லை, மேலும் சடவஹானா எல்லைக்குள் பல சுரங்க இடங்கள் இருந்தன, இது நாணயங்களில் பிராந்திய வேறுபாடுகளுக்கு வழிவகுக்கிறது.

சடவஹான்களின் நாணய புனைவுகள், எல்லா பகுதிகளிலும், எல்லா காலங்களிலும், விதிவிலக்கு இல்லாமல் ஒரு பிரகிருத பேச்சுவழக்கைப் பயன்படுத்தின. கூடுதலாக, சில தலைகீழ் நாணயம் புனைவுகள் திராவிட (தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளைப் போன்றவை), திராவிட எழுத்தில் உள்ளன (சில வேறுபாடுகள் தவிர பிராமி எழுத்துக்கு ஒத்தவை).

சாதவாகன நாணயங்கள் அவற்றின் காலவரிசை, மொழி மற்றும் முக அம்சங்கள் (சுருள் முடி, நீண்ட காதுகள் மற்றும் வலுவான உதடுகள்) போன்ற தனித்துவமான அறிகுறிகளைக் கொடுக்கின்றன. அவர்கள் முக்கியமாக ஈயம் மற்றும் செப்பு நாணயங்களை வெளியிட்டனர்; அவர்களின் உருவப்பட பாணி வெள்ளி நாணயங்கள் பொதுவாக மேற்கு க்ஷத்திரப மன்னர்களின் நாணயங்கள் மீது தாக்கப்பட்டன. சாதவாகன நாணயங்கள் யானைகள், சிங்கங்கள், குதிரைகள் மற்றும் சைத்யாக்கள் (ஸ்தூபங்கள்) போன்ற பல்வேறு பாரம்பரிய அடையாளங்களையும், அத்துடன்" உஜ்ஜைன் சின்னம்", நான்கு வட்டங்களைக் கொண்ட சிலுவையையும் காண்பிக்கின்றன.

## கலாச்சார சாதனைகள்

கிரேட் சைத்யா கர்லா குகைகள், மகாராஷ்டிரா, இந்தியா , சி. 120 பொ.ச. சாதவாகன ஆட்சியாளர்கள் அதன் கட்டுமானத்திற்கான மானியங்களை வழங்கினர். சடவஹான்கள் சமஸ்கிருதத்திற்கு பதிலாக பிரகிருத மொழியை ஆதரித்தனர். சாதவாகன மன்னன் ஹலா கஹா சத்தாசாய் ( சமஸ்கிருதம் : கோதே சப்தாஷாத் ) என்று அழைக்கப்படும் மகாராஷ்டிரி கவிதைகளின் தொகுப்பைத் தொகுப்பதில் புகழ் பெற்றவர், இருப்பினும் மொழியியல் சான்றுகளிலிருந்து, தற்போதுள்ள படைப்புகள் அடுத்த நூற்றாண்டில் மீண்டும் திருத்தப்பட்டிருக்க வேண்டும் அல்லது

தெரிகிறது இரண்டு. இந்த புத்தகத்தின் மூலம், விவசாயமே வாழ்வாதாரத்தின் முக்கிய வழிமுறையாக இருந்தது என்பது தெளிவாகத் தெரிந்தது. பல வகையான மூடநம்பிக்கைகளும் மேலோங்கியிருந்தன. கூடுதலாக, ஹலாவின் மந்திரி குணாத்யர், பிரஹத்கதாவின் ஆசிரியராக இருந்தார்.

**சிற்பங்கள்**

மதுகர் கேசவ் தவாலிகர் எழுதுகிறார், "சடவஹன சிற்பங்கள் துரதிர்ஷ்டவசமாக ஒரு தனித்துவமான பள்ளியாக அங்கீகரிக்கப்படவில்லை, அதன் தனித்துவமான சிறப்பியல்பு அம்சங்கள் இருந்தபோதிலும். காலத்தின் ஆரம்பம் என்னவென்றால், பஜா விஹாரா குகையில் சிற்பத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது 200BC இல் சடவஹானா ஆதிக்கத்தில் கலை. இது செதுக்கல்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது, மேலும் தூண்களில் கூட தாமரை மூலதனம் சிஹின்க்ஸ் போன்ற புராண விலங்குகளால் முடிசூட்டப்பட்டுள்ளது. சங்கமத்தில் "வடக்கு நுழைவாயிலின் மேற்குத் தூணில் நிகழும் குழு புத்தரின் வாழ்க்கையில் ஒரு மிக முக்கியமான நிகழ்வை சித்தரிக்கிறது" என்று தவாலிகர் எழுதுகிறார். இது வாக்காளர்களை சித்தரிக்கிறது, தலா இரண்டு பக்கங்களிலும் ஒரு ஏணி போல தோற்றமளிக்கிறது, இது உண்மையில் புத்தர் கருதப்படும் ஊர்வலம் புத்தர், அறிவொளியை அடைந்தபின், போதி மரத்தின் அருகே நான்கு வாரங்கள் கழித்ததாகக் கூறப்படுகிறது. இவற்றில், மூன்றாவது வாரம் அவர் உலாவும் பாதையில் (சங்கம) நடந்து சென்று கழித்தார்.

மேற்கூறிய சில பெரிய சடவஹனா சிற்பங்களுடன், இன்னும் சில சிற்பங்கள் உள்ளன - அதாவது துவாரபாலா, கஜலட்சுமி, ஷலபஞ்சிகாக்கள் ராயல் ஊர்வலம், அலங்கார தூண் போன்றவை.

பல உலோக சிலைகள் சடவஹான்களுக்குக் காரணமாக இருக்கலாம். பிரம்ஹாபுரியிலிருந்து தனித்துவமான வெண்கலப் பொருட்களின் பதுக்கலும் கிடைத்தது . அங்கிருந்து பெறப்பட்ட ஏராளமான கட்டுரைகள் இந்திய, ஆனால் ரோமானிய மற்றும் இத்தாலிய செல்வாக்கையும் பிரதிபலித்தன. போஸிடான் ஒரு சிறிய சிலை, ஒயின் குடங்கள் மற்றும் பெர்சியஸ் மற்றும் ஆண்ட்ரோமெடாவை சித்தரிக்கும் ஒரு தகடு ஆகியவை வீட்டிலிருந்து பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலிருந்து பெறப்பட்டன. இல் நன்றாக யானை Ashmolean அருங்காட்சியகம் , உள்ள Yaksi படத்தை பிரிட்டிஷ் அருங்காட்சியகம், மற்றும் கார்ன்கோபியாவில் Posheri உள்ள வைக்கப்பட்டது

கண்டுபிடிக்கப்பட்டது சத்ரபதி சிவாஜி மகாராஜ் வாஸ்து சங்ரஹாலயா மேலும் சாதவாகனர் காலம் கற்பித்துக் கூறலாம்.

**கட்டிடக்கலை**

அமராவதி ஸ்தூபியின் சிற்பங்கள் சதாவஹன காலங்களின் கட்டடக்கலை வளர்ச்சியைக் குறிக்கின்றன. அவர்கள் அமராவதியில் (95 அடி உயரம்) புத்த ஸ்தூபிகளைக் கட்டினார்கள் . கோலி, ஜாகியாஹ்பேட்டா, கந்தசாலா, அமராவதி பட்டிப்ரோலு, மற்றும் ஸ்ரீ பர்வதம் ஆகிய இடங்களிலும் ஏராளமான ஸ்தூபங்களை அவர்கள் கட்டினர். அஜந்தா ஓவியங்களைக் கொண்ட குகைகள் IX மற்றும் X ஆகியவை சதாவஹனத்தால் ஆதரிக்கப்பட்டன, மேலும் குகைகள் முழுவதும் ஓவியம் அவர்களுடன் தொடங்கியதாகத் தெரிகிறது. அசோகன் ஸ்தூபங்கள் பெரிதாக்கப்பட்டன, முந்தைய செங்கற்கள் மற்றும் மர வேலைகள் கல் வேலைகளால் மாற்றப்பட்டன. இந்த நினைவுச்சின்னங்களில் மிகவும் பிரபலமானவை ஸ்தூபங்கள், அவற்றில் மிகவும் பிரபலமானவை அமராவதி ஸ்தூபம் மற்றும் நாகார்ஜுனகொண்ட ஸ்தூபம்.

**ஓவியங்கள்**

சாதவாகன ஓவியங்கள் இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய பாறை கலையைத் தவிர்த்து, எஞ்சியிருக்கும் ஆரம்பகால மாதிரிகள், அவை அஜந்தா குகைகளில் மட்டுமே காணப்படுகின்றன . அஜந்தாவின் கலை நடவடிக்கைகளில் இரண்டு கட்டங்கள் இருந்தன: முதலாவது கிமு 2 முதல் 1 ஆம் நூற்றாண்டுகளில், சாதவாகன ஆட்சியின் போது ஹினாயனா குகைகள் தோண்டப்பட்டபோது; 5 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் வகாடகர்களின் கீழ். இயற்கையின் மாறுபாடுகள் மற்றும் சில காழ்ப்புணர்ச்சிகள் அஜந்தா குகைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. சடவஹான்கள் தொடர்பான சில துண்டுகள் மட்டுமே 9 மற்றும் 10 குகைகளில் எஞ்சியுள்ளன, இவை இரண்டும் ஸ்தூபங்களுடன் கூடிய சைத்ய-கிரிஹாக்கள் .

அஜந்தாவில் சடவஹன காலத்தின் மிக முக்கியமான ஓவியம் குகை எண் 10 இல் உள்ள சடந்தா ஜடகா ஆகும், ஆனால் அதுவும் துண்டு துண்டாக மட்டுமே உள்ளது. இது ஒரு புராணக் கதையுடன் தொடர்புடைய ஆறு தந்தங்களுடன் போதிசத்வா என்ற யானையின் ஓவியம். மனித உருவங்கள், ஆண் மற்றும் பெண் இருவரும் பொதுவாக சடவஹான்கள், சாஞ்சி நுழைவாயில்களில் உள்ள அவர்களின் சகாக்களுடன் கிட்டத்தட்ட ஒத்திருக்கிறார்கள், இதுவரை அவர்களின் உடலியல், உடைகள் மற்றும்

நகைகளைப் பொருத்தவரை. ஒரே வித்தியாசம் என்னவென்றால், சாஞ்சி புள்ளிவிவரங்கள் அவற்றின் எடையில் சிலவற்றைக் குறைத்துவிட்டன.

அமராவதியின் கலை

புத்த கலை மற்றும் கட்டிடக்கலைக்கு அவர்கள் செய்த பங்களிப்புகளிலும் சாதவாகன ஆட்சியாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் . அவர்கள் பெரும் Stupas கட்டடப்பட்ட கிருஷ்ணா நதி மணிக்கு ஸ்தூபி உட்பட பள்ளத்தாக்கு அமராவதி உள்ள ஆந்திரப் பிரதேசம் . ஸ்தூபங்கள் பளிங்கு அடுக்குகளில் அலங்கரிக்கப்பட்டு புத்தரின் வாழ்க்கையின் காட்சிகளால் செதுக்கப்பட்டன, அவை மெலிதான மற்றும் நேர்த்தியான பாணியில் சித்தரிக்கப்பட்டன. அமராவதி பாணி சிற்பம் தென்கிழக்கு ஆசியாவின் சிற்பத்தையும் பாதித்தது.

# பல்லவர்

பல்லவர் (Pallavas) என்போர் தென்னிந்தியாவில் கி.பி. 275 முதல் கி.பி. 897 வரை சுமார் ஐந்நூற்று ஐம்பது ஆண்டுகள் தமிழகத்தில் நிலைத்து ஆட்சி புரிந்தவர்கள். இவர்கள் இலங்கையை அடுத்த மணிபல்லவத் தீவிலிருந்து வந்தவர்கள்; தொண்டை மண்டலத்துப் பழங்குடிகள்; பஹலவர்கள் எனும் பாரசீக மரபினர் என்று பல்வேறு கருத்து வேற்றுமைகள் உண்டு. அவர்களைப் பற்றிக் கிடைத்துள்ள சான்று மூலங்களைக்கொண்டு, பட்ட முறைமையை முற்றும் முறைப்படுத்தவும் முடியவில்லை.வின்செண்ட் ஸ்மித் என்னும் ஆங்கில வரலாற்றாசிரியர் தமது நூலின் முடிவாகப் பல்லவர் தென்னிந்தியரே என்று வரையறுத்துள்ளார். சாதவாகனப் பேரரசில் குறுநில மன்னர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் செயல்பட்டு வந்த இவர்கள் சாதவாகனப் பேரரசு வலுக்குன்றியதும் கிருஷ்ணா ஆற்றிற்குத் தெற்குப்பகுதியை ஆளத் தொடங்கினர். போதிய வலிமை பெற்றதும் தொண்டை நாட்டையும், களப்பிரர்களையும், சிற்றரசர்களாக இருந்த சோழர்களையும் வென்று புதுக்கோட்டை வரை சென்று தமிழகத்தின் வட பகுதியை ஆளத் தொடங்கினர்.

**மூன்று பிரிவுப் பல்லவர்கள்**

பல்லவர்களில், முற்காலப் பல்லவர்கள், இடைக்காலப் பல்லவர்கள் மற்றும் பிற்காலப் பல்லவர்கள் என்ற மூன்று பிரிவினர் உண்டு.

**முற்காலப் பல்லவர்கள்**

முற்காலப் பல்லவர்களில் பப்பதேவன், சிவகந்தவர்மன், விசய கந்தவர்மன், இளவரசன் புத்தவர்மன், புத்யங்குரன் ஆகிய ஐவரது பெயர்கள் மயித ஹோலு, ஹீரஹதகல்லி, குணபதேய என்ற மூன்று இடங்களில் கிடைத்த படயங்களின் மூலம் வெளிப்பட்டன. இவர்கள் காலத்தில் ஆந்திரப் பகுதியும் தொண்டை நாட்டின் வடபகுதியும் பல்லவ நாடாக விளங்கின.

**இடைக்காலப் பல்லவர்கள்**

இடைக்காலப் பல்லவர்களின் காலம் கி.பி. 340 முதல் கி.பி. 615 வரை நீண்டது.

முதலாம் குமாரவிட்ணு
முதலாம் கந்தவர்மன்
வீரகூர்ச்சவர்மன்
கந்தசிஷ்யன் எனப்பட்டஇரண்டாம் கந்தவர்மன்
இளவரசன் விட்ணுகோபன்
புத்தவர்மனாகிய இரண்டாம் குமாரவிட்ணு
இரண்டாம் சிம்மவர்மன்
மூன்றாம் கந்தவர்மன்
மூன்றாம் குமாரவிட்ணு
எனப் பதின்மூன்று பேர்களின் விவரங்கள் கிடைக்கின்றன.

**பிற்காலப் பல்லவர்கள் மரபு**

பிற்காலப் பல்லவர்களில் சிம்மவிஷ்ணுவின் மரபில் வந்த முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேசுவரவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன், அவன் மகன் மூன்றாம் மகேந்திரவர்மன் என ஒரு மரபு நீள்கிறது. பிற்காலப் பல்லவர்களின் பிந்தைய தலைமுறையினரில் பரமேசுவரவர்மனும், இராஜசிம்மன் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் நரசிம்மனும் சிறப்புற்ற மன்னர்களாவர். இவர்கள் காலத்தில் தான் இன்றும் நிலைத்திருக்கும் மாமல்லபுரத்துக் கலைச் செல்வங்கள் உருவாக்கப்பட்டன.

**பல்லவர் காலமும் சமுதாய மாற்றமும்**

பல்லவர்கள் காலத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் பற்பல. அவற்றுள் முதன்மையானது சங்க கால மன்னர்களுக்குப் பின் மக்களின்

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் பல்லவர்கள் காட்டிய அக்கறையாகும். பல பேரேரிகளையும் குளங்களையும், கிணறுகளையும் ஆற்று வாய்க்கால்களையும் வெட்டியவர்கள் பல்லவர்கள். பல்லவர்கள் காலத்தில் வரிச்சுமை அதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் கூடுதலாகவே அமைந்தது. வேளாண்மை வரி, தொழில்வரி என்று தனித்தனியே பிரித்து வரி வசூலித்தனர். அவர்கள் காலத்தில் வடமொழிக் கல்வியே ஊக்குவிக்கப்பெற்றது. இக்காலத்தில் சமண, பௌத்த, வைணவ சமயங்கள் நிலவிய போதும் சைவமே தழைத்தோங்கி செல்வாக்கு பெற்றது.

**ஊராட்சி முறை**

ஊரின் ஆட்சி ஊரவைப் பெருமக்களால் நடைபெற்றது. ஊரவைகள், ஏரிவாரியம், தோட்டவாரியம் போன்ற பல வாரியங்கள் வாயிலாக மக்களாட்சி நடத்தியது. ஆளுங்கணத்தார் என்போர் சிற்றூர்களை நேரே பொறுப்பாக அரசியலுக்குட்பட்டு ஆண்டவர்களாவர். கோயில் தொடர்புற்ற பல்வகை செயல்களையும் கவனித்துக் கோயில்களைப் பாதுகாத்தவர் 'அதுர்கணத்தார்' எனப்பட்டனர். இவர்கள் கோயில் தொடர்பான செய்திகளில் ஊரவைக்குப் பொறுப்பானவர்களாவர்.

சிற்றூர்களின் எல்லைகள் அளக்கப்பட்டுக் குறிக்கப்பட்டன. கிணறுகள், குளங்கள், கோயில்கள், ஓடைகள் முதலியன ஊருக்குப் பொதுவாக விளங்கின. நெல் அடிக்கும் களத்துகு வரியாக, நிலத்துச் சொந்தக்காரர் குறிப்பிட்ட அளவு நெல்லைச் சிற்றூர்க் களஞ்சியத்துக்குச் செலுத்தினர்.

பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட சிற்றூர்கள் பிரமதேயச் சிற்றூர்கள் எனப்பட்டன. இவை எவ்வித வரியும் அரசுக்குச் செலுத்த வேண்டியதில்லை.[16] சில உரிமைகள் வழங்கப்பட்டதோடு நிலங்கள் தானமாக அளிக்கப்படுவதற்கு முன்னர் அவற்றின் மேலிருந்த தனிப்பட்ட குடிமக்களின் உரிமை அடையாளங்கள் மாற்றப்பட்டன. தானம் அளிக்க விரும்பும் ஒருவன் தானமாக வழங்கப்பட இருக்கும் நிலத்தின் உரிமையாளரிடமிருந்து விலைக்கு வாங்கி தன் சொந்தமாக்கிக் கொண்டபிறகே தானமாக வழங்குவான். பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட பிரமதேயம், கோயில்களுக்கு வழங்கப்படும் தேவபோகம் தேவதானமாகப் பௌத்த, சமண சமய மடங்களுக்கு வழங்கப்பட்ட பள்ளிச்சந்தம் ஆகியவை இம்முறையைப் பின்பற்றியே தானமாக வழங்கப்பட்டன. இக்கிராமங்களின் நிர்வாகத்தினை நாடுகாப்பாணும்,அதன்பணியை தானம் பெற்றவர்களும்

அவர்கள் மரபு வழியினரும் கவனித்து வர வேண்டும் என்பது தானத்தில் நிபந்தனையாகும்.

### வரிகள்

### வேளாண்மை வரிகள்

தென்னை, பனை, பாக்கு ஆகிய மரங்களைப் பயிரிடும் உரிமை பெற அரசாங்க வரி விதிக்கப்பட்டது. கள் இறக்கவும், சாறு இறக்கவும், பனம்பாகு காய்ச்சவும், கடைகளில் பாக்கு விற்கவும் வரி விதிக்கப்பட்டது, கல்லால மரம் பயிரிட, சித்திரமூலம் என்னும் செங்கொடி பயிரிட, கரிசலாங்கண்ணி என்னும் மூலிகை பயிரிட உரிமை பெறக் கல்லாலக்காணம், செங்கொடிக்காணம், கண்ணிட்டுக் காணம் ஆகிய தொகைகள் அரசாங்க உரிமை பெறச் செலுத்தப்பட்டன.

மருக்கிழுந்து பயிரிட மருக்கொழுந்துக் காணம், நீலோற்பலம், குவளை ஆகியவை நடுவதற்கு உரிமை பெற குவளை நடுவரி, விற்பனை செய்யக் குவளைக் காணம் ஆகியன அரசாங்கத்தால் பெறப்பட்டன. பிரம்மதேயம், தேவதானச் சிற்றூர்கள் இவ்வரிகளிலிருந்து விலக்குப் பெற்றன.

### தொழில் வரிகள்

ஆடு, மாடு ஆகிய காலநடைகளால் பிழைப்பவர், புரோகிதர், வேட்கோவர்(குயவர்), பலவகைக் கொல்லர், வண்ணார், ஆடைநெய்வோர், நூல் நூற்போர், வலைஞர், பனஞ்சாறு எடுப்போர், மணவீட்டார், ஆகிய தொழிலாளரும், பிறரும் அரசாங்கத்திற்கு வரி செலுத்தினர்.

### பண்டாரம்

ஊர்மன்றங்களில் வழக்காளிக்கு விதிக்கப்பட்ட தண்டம் "மன்றுபாடு" எனப்பட்டது.பல்லவர் அரசாங்கப் பண்டாரத்தைத் தகுதியுடைய பெருமக்களே காத்துவந்தனர். இவர்கள் பேரரசுக்குரிய பண்டாரத்தலைவர் எனப்பட்டனர். இவர்களுக்குக் கீழ் மாணிக்கம் பண்டாரம் காப்போர், பண்டாரத்திலிருந்து பொருள் கொடுக்கும்படி ஆணையிடும் அலுவலர்கள் ஆகிய கொடுக்கப் பிள்ளைகள் எனபோரும் இருந்தனர்.

**அளவைகளும் நாணயங்களும்**

**நில அளவை**

பல்லவர் காலத்தைல் விளங்கிய நில அளவைகள் குழி, வேலி என்பன. மேலும் கலப்பை, நிவர்த்தனர், பட்டிகாபாடகம் என்பனவும் நில அளவைகளாக வழங்கின.

**முகத்தலளவை**

முகத்தல் அளவைகளாகக் கருநாழி, நால்வாநாழி, மாநாய நாழி, பிழையாநாழி, நாராய(ண)நாழி என்பனவும் உழக்கு (விடேல் விடுகு உழக்கு), சிறிய அளவையான பிடி, சோடு, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம் என்பனவும் பயன்பட்டன.

**நிறுத்தலளவை**

கழஞ்சு மஞ்சாடி என்பன பொன் நிறுக்கும் அளவைகள்

**நாணயங்கள்**

பல்லவர் காசுகள் செம்பாலும் வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்பட்டவை. அவை நந்தி, பாய்மரக் கப்பல், சுவஸ்திக், கேள்விக்குரிய சங்கு, சக்கரம், வில், மீன், குடை, கோயில், குதிரை, சிங்கம் ஆகிய உருவங்களைப் பொறித்தும் வழங்கப்பட்டன.

**நீர்ப்பாசன வசதிகள்**

காடுகளை அழித்து உழுவயல்களாகப் பல்லவர்கள் மாற்றியதால், அவர்களுக்குக் காடுவெட்டிகள் என்ற பெயரும் உண்டு. காடு வெட்டிகளான பல்லவர்கள் நாடு திருத்த நீர்ப்பாசன வசதிகள் நிரம்பச் செய்தனர். பல்லவ அரசர்களும், சிற்றரசர்களும், பொதுமக்களும் ஏரிகள், கூவல்கள்(கிணறுகள்), வாய்க்கால்கள், மதகுகள் அமைத்து நீர்ப்பாசன வசதிகளைச் செய்து வளம் பெருக்கினர்.

**ஏரிகள்**

இராச தடாகம், திரளய தடாகம்(தென்னேரி), மகேந்திர தடாகம்(மகேந்திரவாடி ஏரி),சித்திரமேக தடாகம்(மாமண்டூர் ஏரி), பரமேசுவர தடாகம்(வரம் ஏரி), வைரமேகன் தடாகம்(உத்திரமேரூர் ஏரி), வாலிவடுகன் ஏரி, மாரிப்பிடுகன் ஏரி(திருச்சி ஆலம்பாக்கம்), வெள்ளேரி, தும்பான் ஏரி,

மூன்றாம் நந்திவர்மன் காலத்தி அவனி நாராயண சதுர்வேதி மங்கலத்து ஏரி(காவேரிப்பாக்கத்து ஏரி, மருதநாடு ஏரி வந்த வாசிக் கூற்றம்), கனகவல்லி தடாகம்(வேலூர்க்கூற்றம்) ஆகியன பல்லவர் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளாகும்.

### கிணறுகளும், கால்வாய்களும்

பல்லவர்கள் காலத்தில் ஏராளமான கிணறுகளும் கால்வாய்களும் வெட்டப்பட்டன. திருச்சிராப்பள்ளி திருவெள்ளறையில் தோண்டப்பட்ட கூவல் என்னும் மார்ப்பிடுகு பெருங்கிணறு முப்பத்தேழு சதுர அடிகொண்ட சுவஸ்திக் வடிவத்தில் விளங்குவது. அது இக்காலத்திய கிணறுகளுக்குச் சான்றாகும். மேலும் பாலாறு, காவிரி முதலிய ஆறுகளிலிருந்து நீரைக் கொண்டு செல்லும் கால்வாய்கள், ஆற்றுக்கால், நாட்டுக்கால் எனப்பெயர் பெற்றன. வைரமேகம் வாய்க்கால், பெரும்பிடுகு வாய்க்கால், கணபதிவாய்க்கால், ஸ்ரீதரவாய்க்கால் என்பன அவற்றுள் சில.

### பஞ்சங்கள்

பல்லவர் காலத்தில் இடைவிடாத பல போர்கள் காரணமாகப் பஞ்சங்களும் தோன்றின. இராசசிம்மன் காலத்துப் பஞ்சம் பற்றி அவைக்களத்துப் புலவர் தண்டி விளக்கமாக எடுத்துரைக்கிறார். மூன்றாம் நந்திவர்மன்காலத்துத் தெள்ளாற்றுப் போர் போன்ற போர்களின் காரணமாக உண்டான பஞ்சம் பற்றிப் பெரிய புராணம் கூறுகிறது.

### நடுகல்

பல்லவர் காலத்தில் ஒருவர் செய்த சிறப்பு மிக்க செயலுக்காகப் பாராட்டி அவர் பெயரால் கோவிலுக்குப் பொன் கொடுத்து விளக்கேற்றச் சொல்லுதலோ, வேறு நற்செயலோ நடைபெறச் செய்தல் வழக்கமாகும். சிறந்த செயல் செய்தோ, போரிலோ ஒருவர் இறந்துவிட்டால் அவர் நினைவாக வீரகற்கள் நடுவதும் சில இடங்களில் பள்ளிப்படைக் கோயில்கள் கட்டுவதும் அக்காலத்து வழக்கமாகும்.

### பல்லவர் காலத்துக் கல்வியும் சமுதாய நிலையும்

பல்லவ எழுத்து முறை கல்வெட்டு காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்-இல் உள்ளது. இது பல்லவப் பேரரசின் காலத்தில் c. 700s CE -இல் கட்டப்பட்டது.

பல்லவர் காலக் கல்விநிலை என்பது சமயம் சார்ந்ததாக இருந்தது. சமயக் கல்விதான் கல்வியோ என்று ஐயுற வேண்டிய வகையில் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் கல்வி கற்பிக்கப்பட்டது.

### கல்வி

மக்கள் வடமொழியும், தமிழ்மொழியும், பல்வேறு கலையறிவும் பெற உதவியாகக் கல்வியமைப்பு இருந்தது. காஞ்சி மாநகரில் வடமொழியில் வேதங்கள் போன்ற உயர் ஆராய்ச்சிக்கல்வி அளிக்கும் கடிகைகள் இருந்தன. மேலும் கடிகாசலம் எனப்படும் சோழசிங்கபுரம் கடிகை, தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பர்கூர் வடமொழிக்கல்லூரி, தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய நூல்கள் படைக்கும் ஆற்றலளிக்கும் தமிழ்க்கல்வி இருந்தது. அவை அக்காலக் கல்வி மேம்பாட்டுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

### சமயநிலை

துவக்கத்தில் சமணர்களாக இருந்த பல்லவர்கள், சைவ சமயத்தில் ஈடுபாடு காட்டினர். சைவ சமய உட்பிரிவுகளான பாசுபதம், காபாலிகம், காளாமுகம், ஆகியவை இவர்கள் காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்தன.சைவர்களே ஆனாலும் பல்லவர்கள் வைணவம் தழைக்கவும் வழி செய்தனர்.இவர்கள் காலத்தில் தேவாரப் பதிகங்களும் திவ்வியப் பிரபந்தமும் பாராயணம் செய்யப்பட்டன.

### கலை இலக்கிய வளர்ச்சி

பல்லவர்கள் காலத்திலேயே தமிழ் நாட்டில் இந்து சமய மறுமலர்ச்சியும், சிற்பம்,இசை, ஓவியம், கட்டிடக்கலை முதலிய கலை வளர்ச்சியும் இலக்கியமும் அவர்கள் காலத்தில் உச்ச நிலையடைந்தன.[22] கலை ஆர்வலர்களான பல்லவர்கள் எல்லாக் கலைகளிலும் ஒருமித்த ஆர்வம் காட்டினார்கள். தாமே பண்களைத் தொகுத்தும் பாடியும் மகிழ்ந்தனர். நாயன்மார்களும், ஆழ்வார்களும், பாடிய பாடல்கள் பலவற்றிற்கு அவர்கள் காலத்தில் பண்கள் அமைக்கப்பட்டிருந்ததன. அவை கடவுள் உலாக்களின் போது பாடப்பட்டன. இசைக்கருவிகளிலும் புதிய மாற்றங்களைப் பல்லவர்கள் செய்து அறிமுகப்படுத்தினர். ஓவியக் கலையில் பல்லவர்களுக்கு இருந்த ஈடுபாடு சித்தன்னவாசல் ஓவியங்களின் முலம் நன்கு வெளிப்படுகிறது. பல்லவர்கள் காலம் கட்டடக்கலைக்கு உலகப் புகழ் தேடித்தந்த காலமாகும். அவர்களது குடைக்

கோயில்களும் மாமல்லபுரத்துச் சிற்பங்களும் குடைவரைக் கோயில்களும் இன்றளவும் உலக மக்களின் போற்றுதலுக்கு உரியனவாகும்.

## இலக்கியம்

### தமிழிலக்கியங்கள்

பல்லவர் காலத்துப் பக்தி இயக்கம் தமிழுக்குப் புதிய வகை இலக்கியத்தினை அளித்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிச்செய்த பக்திப் பாடல்கள் அக்கால சமுதாய நிலை சமய, மொழி நிலையையும், கலைச் சிறப்பையும் உணர்த்துவன. பழைய அகப்பாடல் மரபுகள் இப்பாடல்களில் புது உருவம் பெறினும், வட சொல்லாட்ட்சி மிகுந்து காணப்படுகின்றன. மேலும் நந்திக் கலம்பகம், பெருந்தேவனார் பாடிய பாரதம், பெருங்கதை, இறையனார் களவியலுறை திருமந்திரம், சங்க யாப்பு, பாட்டியல் நூல், மகாபுராணம், முத்தொள்ளாயிரம், புராண சாகரம், கலியாண கதை, அணியியல், அமிர்தபதி, அவிநந்த மாலை, காலகேசி, இரணியம், சயந்தம், தும்பிப் பாட்டு முதலிய நூல்களும் பல்லவர் காலத்தில் தோன்றியனவே. காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் ஆகியோரும் பல்லவர் காலத்தில் வாழ்ந்தவர்களே.

### வடமொழி இலக்கியங்கள்

பல்லவர்களில் பலர் சிறந்த வடமொழியறிஞர்களாக விளங்கினர். லோக விபாகம், அவந்தி சுந்தரி கதை, காவியதர்சம் முதலான நூல்கள் தோன்றின. முதலாம் மகேந்திர வர்மன் மத்தவிலாசப் பிரகசனம் எனும் நகைச்சுவை நாடகத்தை வடமொழியில் எழுதினான். மேலும் பாரவி, தண்டி போன்ற புலவர்களும் இருந்தனர். அவந்தி சுந்தரி, கதா போன்ற வடமொழிப்பாடல்கள் தோன்றின. வடமொழிப் பட்டயங்கள் அழகிய இலக்கிய நடையில் எழுதப்பட்டன. காஞ்சியிலும் கடிகாசலத்திலும், பர்கூரிலும் வடமொழிக் கல்லூரிகள் இருந்தன. கடிகாசலத்தில் மயூரசன்மன் மாணவனாக இருந்தான். தர்மபாலர் என்னும் பெரியார் இங்கிருந்து நாளந்தாப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார்.

## இசைக்கலை

பல்லவர்காலத்தில் தமிழகத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இசைக்கருவிகளுடன், அடியார்கள் புடை சூழ தேவர் மூலருக்கும் பாடல்கள் பாடிக்கொண்டு ஆலயங்கள் தோறும் சென்று சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்தனர். தாளத்தோடு கூடிய இன்னிசையைப்

பரப்பினர். நாயன்மார்களது பதிகங்களில் சாதாரி, குறிஞ்சி, நட்டபாடை, இந்தளம், வியாழக் குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக் காந்தாரம், செவ்வழி, கொல்லி, பாலை போன்ற பண்கள் பயன்படுத்தப்பட்டன

தோற்கருவி, துளைக்கருவி நரம்புக்கருவி, கஞ்சக்கருவி போன்ற வகையினைச் சார்ந்த யாழ், குழல், வீணை, தமருகம், சக்கரி, கொக்கரி, கரடிகை, மொந்நதை, முழவம், தக்கை, துந்துபி, குடமுழா, உடுக்கை, தடி, தாளம் முதலிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன, திருநீலகண்ட யாழ்ப்பாணர், ஆனாயானார் போன்ற இசைப் பேரறிஞர்கள் கருவியிசை மூலமாகச் சமயம் வளர்த்தனர்.

சதுரஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீரணம் எனும் தாள வகைகள் கடைசியான சங்கீரணம் என்பதனைப் புதியதாகக் கண்டு அதன் வகைகளையும் ஒழுங்குகளையும் அமைந்த காரணத்தால் மகேந்திரவர்ம பல்லவன் சங்கீரண சாதியென அழைக்கப்பட்டான்.

இசை நுட்பம் உணர்ந்த மகேந்திரவர்மன் காலத்தில், புதுக்கோட்டையைச் சேர்ந்த குடுமியா மலையில் இசை மாணவர் நன்மைக்காகப் பண்களை வகுத்துத் தந்தவர் உருத்திராச்சாரியார் என்பவர் ஆவார். மாணவனான அரசன் கட்டளைப்படி இங்கு இசைக்கல்வெட்டு அமைக்கப்பட்டது. எட்டு நரம்புகளைக் கொண்ட வீணைக்கும் பயன்படுமாறு கண்டறிந்த பண்கள் இதில் பொறிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. பரிவாதினி எனும் வீணையில் வல்லவனாக இம்மன்னன் திகழ்ந்தான்.

**ஆடற்கலை**

மகேந்திரவர்மன் காலத்துச் சித்தன்னவாசல் ஓவியங்கள் பல்லவர்கள் காலத்தில் நடனக் கலை பெற்றிருந்த ஏற்றத்தினை விளக்குகின்றன. பரமேசுவர விண்ணகரம் எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோவிலில் ஆடவரும் பெண்டிரும் அணி செய்து கொண்டு ஆடி நடிக்கும் காட்சி சிற்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பல்லவர் காலத்துக் கோயில்களுள் இசையும், கூத்தும் வளர்க்க அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர் என்னும் பெண்மக்கள் இருந்தனர். இது தேவாரம் போன்றா சிற்றிலக்கியங்கள் வாயிலாகவும், கல்வெட்டுகள் வாயிலாகவும் தெரிய வருகிறது. காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடிய நாதாந்த தூக்கிய திருவடி(குஞ்சித பாதம்) நடனம் சிற்பவடிவத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

**கட்டடக்கலை**

மகேந்திரவர்மனால் தமிழகத்தில் கட்டப்பட்ட குகைக்கோயில்கள் சிறப்பு வாய்ந்தவை. சிம்மவிஷ்ணுவால் கட்டப்பட்டன என்று கருதப்படும் ஆதிவராகர் கோயில் குகைக்கோயிலாகும். மகேந்திரவர்மன் கட்டிய குகைக் கோயில்கள் அனைத்தும் மலைச் சரிவுகளில் குடைந்து அமைத்தவையாகும். இத்தகைய குகைக்கோயில்கள் சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் சிவன் கோயில்களாக அமைந்தன. மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்காவரம், நாமக்கல் ஆகிய இடங்களில் பெருமாள் கோயில்களாக அமைந்தன. மண்டகப்பட்டில் குடைந்துள்ள குகைக்கோயிலில் பிரமன், சிவன், திருமால் ஆகிய மூவருக்கும் ஒவ்வொரு அறை வீதம் மூன்று அறைகளோடு அமைக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள தருமராசர் மண்டபமும், கொடிக்கால் மண்டபமும் மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்டவை. இங்கு நரசிம்மவர்மனால் அமைக்கப்பட்ட பஞ்சபாண்டவர் தேர்கள் என்றழைக்கப்படுபவை ஒரே கல்லைக் கோயிலாக அமைத்துக் கொண்ட கட்டடக்கலை அமைப்பைச் சேர்ந்ததாகும். திரௌபதியம்மன் தேர் என்றழைக்கப்படும் கோயில் தூங்காணை மாடம் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட கட்டடக் கலை அமைப்பைச் சேர்ந்ததாகும். இது பண்டைக் காலத்து பௌத்த சைத்தியத்தை ஒத்தது. பரமேசுவரவர்மன், கூரம் என்னும் சிற்றூரில் அமைத்த சிவன் கோயில் தமிழகத்து முதற் கற்கோயில் ஆகும்.

**சிற்பக்கலை**

மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகிய பல்லவ மன்னர்கள் தாம் அமைத்த குகைக் கோயில்களில் வாயிற்காவலர் (துவாரபாலகர்), விஷ்ணு, சிவன், லிங்கம், இசைவாணர்(கந்தர்வர்), முயலகன், ஆதிவராகர், மகிஷாசுரமர்த்தினி, வராக அவதாரம், வாமன அவதாரம், கங்கைக் காட்சி, அர்ச்சுனன் தவம் அல்லது பகீரதன் தவம், கோவர்த்தன கிரியைக் கண்ணன் குடையாகப் பிடித்தது போன்ற காட்சிகளைச் சிற்பங்களாக அமைத்துள்ளனர். பல்லவர் அமைத்த கோயில்களின் தூண்களும், சுவர்களும், போதிகைகளும், விமானங்களும் கண்கவரும் சிற்பங்களைக் கொண்டு திகழ்கின்றன. மகாபலிபுரம் பல்லவரின் சிற்பக்கலைக் கூடமாகவே திகழ்கின்றது.

**ஓவியக்கலை**

ஓவியக் கலையில் பல்லவர்களுக்கு இருந்த ஈடுபாடு சித்தன்னவாசல் ஓவியங்களின் மூலம் நன்கு வெளிப்படும். 1400 ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட அந்த ஓவியங்கள் வண்ணக்கலவை மாறாது அவற்றின் தனிச்சிறப்பை உணர்த்துவன. இவ்வோவியங்கள் சமண சமயத்தைச் சேர்ந்தன.

# சாளுக்கியர்

சாளுக்கியர் என்பவர்கள் இந்தியாவின் அரச வம்சம் ஒன்றைச் சேர்ந்தவர்கள். கி.பி ஆறாம் நூற்றாண்டுக்கும், 12 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தெற்கு மற்றும் மத்திய இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்டு வந்தனர். சாதவாகனப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, தங்கள் சுதந்திரத்தை உறுதிப்படுத்திக்கொண்ட இவர்கள், இந்திய வரலாற்றில் சிறந்த அரசர்களில் ஒருவனான, இரண்டாம் புலிகேசியின் (கி.பி 609 - 642) ஆட்சியின் போது வேகமாக முன்னணிக்கு வந்தனர். இவன் காலத்தில், தெற்கே பல்லவ நாட்டின் வடக்கு எல்லை வரை விரிவடைந்திருந்தது சாளுக்கியப் பேரரசு. வடக்கில், ஹர்சவர்தனரை நர்மதை நதிக்கரையில் தோற்கடித்து அவனது தெற்கு நோக்கிய முன்னேற்றத்தைத் தடுத்தான். தென்கிழக்குத் தக்காணத்தில் விஷ்ணுகுண்டினர்களையும் தோற்கடித்தான். ஆனாலும், பல்லவன் நரசிம்மவர்மன், புலிகேசியைத் தோற்கடித்து அவனைக் கொன்று வாதாபி கொண்டான் நரசிம்மவர்ம பல்லவன் என்றும் பல்லவ வம்சமான இவன் மாவீரன் புலிகேசியை வென்றதால் "மா மல்லன்" எனும் பெயரும் பெற்று அதன் வெற்றியைக் கொண்டாட இன்றையச் சென்னையான பல்லவக் கடற்கரையில் மாமல்லையை உருவாக்கினான்.புலிகேசியின் தலைநகரான வாதாபியையும் ஆக்கிரமித்திருந்தான். சாளுக்கியரின் தலைநகரம் வாதாபி என்பதால் வாதாபி சாளுக்கியர் என்றும் அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இரண்டாம் புலிகேசிக்குப் பின், உட் பூசல்களால் சாளுக்கியர் சிறிது காலம் வீழ்ச்சியுற்று இருந்தனர். இரண்டாம் விக்கிரமாதித்தனின் காலத்தில் மீண்டும் முன்னணிக்கு வந்தனர். இவன் இரண்டாம் நந்திவர்ம பல்லவனைத் தோற்கடித்து அவன் தலைநகரமான காஞ்சியையும் கைப்பற்றினான். இராஷ்டிரகூடர்களின் எழுச்சியைத் தொடர்ந்து வாதாபிச் சாளுக்கியர் தாழ்ச்சியுற்றனர்.

கி.பி 10 ஆம் நூற்றாண்டில், இரண்டாம் தைலப்பா (கி.பி 973 - 997) என்பவனின் கீழ் சாளுக்கியர் மீண்டும் புகழ் பெறத் தொடங்கினர். இவர்கள்

மேலைச் சாளுக்கியர் எனப்படுகின்றனர். மேலைச் சாளுக்கியர், இன்று பசவகல்யாண் என அழைக்கப்படும் கல்யாணி என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். இன்னொரு பிரிவினர், வேங்கி என்னுமிடத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தனர். இவர்கள் கீழைச் சாளுக்கியர் எனப்படுகின்றனர். கீழைச் சாளுக்கிய நாட்டின் கட்டுப்பாட்டுக்காக, மேலைச் சாளுக்கியருக்குச் சோழருடன் ஓயாத போட்டி இருந்துவந்தது. சுமார் 300 ஆண்டுகள் புகழுடன் விளங்கிய சாளுக்கியர், போசளர்களினால் ஒடுக்கப்பட்டனர். கி.பி 1184 தொடக்கம் 1200 வரை ஆண்ட நான்காம் சோமேஸ்வரனே குறிப்பிடத்தக்க சாளுக்கியர்களில் இறுதியானவன் ஆவான்.

சுமார் இரண்டு நூற்றாண்டுகள் தக்காணத்தின் பெரும்பகுதியை ஆட்சி செய்தவர்கள் சாளுக்கியர்கள். பின்னர், இராஷ்டிரகூடர்களின் வலிமை பெருகியது. மேலைச் சாளுக்கியரின் வழிவந்தவர்கள் வெங்கியின் கீழைச் சாளுக்கியர்களும், கல்யாணிச் சாளுக்கியர்களும். மேலைச்சாளுக்கிய மரபைத் தோற்றுவித்தவர் முதலாம் புலிகேசி. வாதாபி அல்லது தற்காலத்திய பாதாமியை தலைநகராகக் கொண்டு அவர் ஒரு சிறிய அரசை தோற்றுவித்தார்.

**இரண்டாம் புலிகேசி (கி.பி. 608 – 642):**

சாளுக்கிய மரபின் முக்கிய ஆட்சியாளர் இரண்டாம் புலிகேசி. ஐஹோலே கல்வெட்டு அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றிய விவரங்களைக் கூறுகிறது.

புனவாசி கடம்பர்களையும் மைசூர் கங்கர்களையும் எதிர்த்துப் போரிட்டு தனது ஆதிக்கத்தை அவர் நிலைநிறுத்தினார்.

கங்க அரசர் துர்விநீதன் அவரது மேலாண்மையை ஏற்றுக்கொண்டு தனது மகளையும் இரண்டாம் புலிகேசிக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

நர்மதையாற்றங்கரையில் ஹர்ஷவர்த்தனரை முறியடித்தது இரண்டாம் புலிகேசியின் மற்றொரு மகத்தான சாதனையாகும். தென்னிந்தியாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஹர்ஷரின் எண்ணத்தை சிதைத்தவன் இரண்டாம் புலிகேசி.

பல்லவர்களுக்கெதிரான தனது முதல் படையெடுப்பில் அவர் வெற்றிபெற்றார். ஆனால், காஞ்சிக்கருகில் முதலாம் நரசிம்மவர்மனிடம் படுதோல்வியைத் தழுவினார்.

பின்னர், சாளுக்கிய தலைநகரம் வாதாபி பல்லவர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. இரண்டாம் புலிகேசியின் ஆட்சிக் காலத்தில் சீனப்பயணி யுவான்சுவாங் அவனது நாட்டிற்கும் வருகை புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் புலிகேசிக்குப்பின் ஆட்சிக்கு வந்தவர் விக்ரமாதித்தன்.

அவன் சாளுக்கிய நாட்டை மீண்டும் நிலைப்படுத்தி பல்லவர்களை முறியடித்ததோடு, காஞ்சியையும் கைப்பற்றினார்.

பல்லவர்களிடம் தனது தந்தை அடைந்த தோல்விக்கு விக்ரமாதித்தன் பழிதீர்த்துக் கொண்டான் சாளுக்கிய மரபின் கடைசி அரசர் இரண்டாம் கீர்த்திவர்மன்.

அவனை முறியடித்து இராஷ்டிரகூட அரசை நிறுவியவன் தந்தி துர்க்கன்.

**சாளுக்கியரின் ஆட்சிமுறை, சமூக வாழ்க்கை**

பல்லவர்கள், சோழர்கள் ஆட்சி முறைக்கு மாறாக, சாளுக்கிய ஆட்சிமுறையில் அதிகாரம் மையப்படுத்தப்பட்டே இருந்தது.

சாளுக்கியரின்கீழ் கிராம சுயாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. சாளுக்கியர்கள் சிறந்த கடற்படையைக் கொண்டிருந்தனர்.

இரண்டாம் புலிகேசியின் கடற்படையில் நூறு கப்பல்கள் இருந்தன. மேலும்ää நிரந்திரமான சிறு படையையுயும் அவர்கள் வைத்திந்தனர்.

பாதாமி சாளுக்கியர்கள் பிராமணீய இந்துக்கள், இருப்பினும் அவர்கள் பிற சமயத்தவரையும் மதித்து நடந்தனர்.

வேத சமய சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சாளுக்கிய மரபைத் தோற்றுவித்த முதலாம் புலிகேசி குதிரைவேள்வியை செய்தார்.

விஷ்ணு, சிவன் போன்ற கடவுளருக்கு ஏராளமான கோயில்கள் அவர்களது காலத்தில் கட்டப்பட்டன.

மேற்குத் தக்காணத்தில் புத்த சமயம் வீழ்ச்சியடைந்தது வந்தது என்று யுவான் சுவாங் தமது பயணக்குறிப்பில் கூறியுள்ளார்.

ஆனால், இப்பகுதியில் சமண சமயம் நிலையான வளர்ச்சியைப் பெற்று வந்தது.

இரண்டாம் புலிகேசியின் அவைப் புலவரும், ஐஹோலே கல்வெட்டைத் தொகுத்தவருமான ரவிகீர்த்தி ஒரு சமணர்.

**கலை, கட்டிடக் கலை**

சாளுக்கியர்கள் கலை வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளனர். கட்டுமானக் கோயில்களை கட்டுவதற்கு அவர்கள் வேசர கலைப்பாணியை பின்பற்றினர்.

இருப்பினும், இராஷ்டிரகூடர் மற்றும் ஹோய்சளர் ஆட்சிக் காலத்தில்தான் வேசர கலைப்பாணி அதன் உச்ச கட்டத்தை எட்டியது.

ஐஹோலே, பாதாமி, பட்டாடக்கல் ஆகிய இடங்களில் சாளுக்கியரின் கட்டுமானக் கோயில்களைக் காணலாம்.

சாளுக்கியர் காலத்தில் குடைவரைக் கோயில்களும் சிறப்பு பெற்றிருந்தன.

அஜந்தா, எல்லோரா, நாசிக் ஆகிய இடங்களில் சாளுக்கியரின் குடைவரைக் கோயில்களைக் காணலாம்.

புதாமி குகைக்கோயில் மற்றும் அஜந்தா குகைகளில் சாளுக்கியர் கால ஓவியங்களைக் காணமுடிகிறது.

இரண்டாம் புலிகேசி ஒரு பாரசீகத்தூதுக் குழுவிற்கு வரவேற்பு அளிப்பது போன்று அஜந்தா ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சாளுக்கியர் கால கோயில்களை இரண்டு நிலைகளாகப் பிரிக்கலாம்.

ஐஹோலே பாதாமி ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் முதல்நிலை. ஐஹோலேவில் உள்ள எழுபது கோயில்களில் நான்கு மட்டும் சிறப்பாக குறிக்கப்பட வேண்டியவை – லட்கான் கோயில் – சமதளக் கூரையுடன் கூடிய இக்கோயிலில் தூண்களையுடைய மண்டபம் உள்ளது.

ஒரு புத்த சைத்தியத்தைப் போல தோற்றமளிக்கும் துர்க்கை கோயில் ஹீச்சிமல்லி குடி கோயில் மெகுதி என்ற இடத்திலுள்ள சமணக் கோணில், பாதாமியில் உள்ள கோயில்களில் முகத்தீஸ்வரர் கோயிலும், மேலக்குட்டி சிவன் கோயிலும் அவற்றின் கட்டிடக் கலைக்கும் அழகிற்குப் பெயர் பெற்றவை.

ஒரேயிடத்திலுள்ள நான்கு குடைவரைக் கோயில்கள் அவற்றின் கலைநயமுள்ள வேலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டு.

அவற்றின் சுவர்களும், தூண்கள் தாங்கும் மண்டபங்களும் கடவுளர் மற்றும் மனிதர்களின் அழகான சிற்பங்களைக் கொண்டு அழகூட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது நிலை, பட்டாடக்கல் என்ற இடத்தில் காணப்படும் கோயில்கள். இங்கு பத்து கோயில்கள் உள்ளன – நான்கு வடஇந்தியா கலைப்பாணியில் அமைந்துள்ளன.

எஞ்சிய ஆறு திராவிட கலைப்பாணியிலானவை. வட இந்திய கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ள பாபநாதர் கோயில் குறிப்பிடத்தக்கது.

திராவிடக் கலைப்பாணியில் அமைந்த சங்கமேஸ்வரர் கோயில் மற்றும் விருப்பாட்சர் ஆலயம் இரண்டும் புகழ் பெற்றவை.

காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தைப் போன்றே விருப்பாட்சர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இரண்டாம் விக்ரமாதித்தனின் அரசிகளில் ஒருவரால் இது கட்டுவிக்கப்பட்டது.

காஞ்சியிலிருந்து சிற்பிகள் வரவழைக்கபட்டு இக்கோயில் கட்டபட்டது என்று கருதப்படுகிறது.

# சோழர்கள்

சோழர் (Chola dynasty) என்பவர் பழந்தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒரு குலத்தவராவர். மற்ற இருவர் சேரர்களும், பாண்டியர்களும் ஆவர். நெல் இயற்கையாகவோ, மிகுதியாகவோ விளைந்த நாடு சோழ நாடெனப்பட்டது. 'சோழ நாடு சோறுடைத்து என்பது பழமொழி'. எனவே சோறுடைத்த நாடு 'சோறநாடு' ஆகிப் பின் சோழ நாடாகியது என்பர். நெல்லின் மற்றொரு பெயரான சொல் எனும் பெயரே லகரம்-ழகரம் ஆகத் திரிந்து "சோழ" என்று வழங்கிற்று என்பார் தேவநேயப் பாவாணர்.[3] சேரர், பாண்டியர் என்ற பெயர்களைப் போன்று சோழர் என்பது பண்டைக் காலந்தொட்டே ஆட்சி செய்து வரும் குடி அல்லது குலத்தின் பெயராகும் என்பது பரிமேலழகர் கருத்து. சோழ மன்னர்களது ஆட்சியின் கீழ் இருந்த பகுதிகளும், மக்களும் பண்டைக்காலம் முதலே இப்பெயராலேயே குறிப்பிடப்பட்டு வந்துள்ளனர். சோழர் குலம் வளம்

பொருந்திய காவிரி ஆற்றுப் படுகைப் பகுதியிலேயே தோற்றம் பெற்றது. கிறித்துவுக்கு முந்தைய நூற்றாண்டுகளிலேயே சோழர் குலம் பெருமையுற்று விளங்கியதாயினும், கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் சோழ மன்னர்கள் சிற்றரசர் நிலைக்குத் தாழ்ந்து போயினர். பழைய சோழமண்டலப் பகுதிகளிலே, உறையூர், பழையாறு போன்ற இடங்களில் அவர்களது சிற்றரசுகள் நிலவின. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ் நாட்டில் சோழர்கள் மீண்டும் வலிமை பெறத்தொடங்கினர். பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகள் சோழர் குலத்தின் பொற்காலமாக விளங்கியது. கி.பி 13-ஆம் நூற்றாண்டு வரை சோழரது ஆட்சி தமிழகத்தில் நிலவியது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டையும் அதற்கு முந்திய காலப்பகுதியையும் சேர்ந்த சோழர் முற்காலச் சோழர் என வரலாற்று ஆய்வாளர்களினால் குறிப்பிடப்படுகின்றனர். முற்காலச் சோழர்களில் கரிகால் சோழன் புகழ் பெற்று விளங்கினார். 9 ஆம் நூற்றாண்டுக்குப் பின் வலிமை பெற்று விளங்கிய சோழ மன்னர் பிற்காலச் சோழர் எனப்படுகின்றனர். இவர்களில், முதலாம் இராசராச சோழரும், அவரது மகனான முதலாம் இராசேந்திர சோழரும், தற்போதய இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மன்னர்களாவர்.

கி.பி. 10-12 ஆம் நூற்றாண்டுகளில், சோழர்கள் வலிமை பெற்று மிகவும் உயர் நிலையில் இருந்தனர். அக்காலத்தில் சோழ நாட்டையாண்ட மன்னர்களில், முதலாம் இராசராசனும், முதலாம் இராசேந்திரனும் முதன்மையானவர்கள். அவர்கள் காலத்தில் சோழநாடு, படையிலும், பொருளாதாரத்திலும், பண்பாட்டிலும் வலிமை பொருந்திய பேரரசாக ஆசியா முழுவதிலும் செல்வாக்குச் செலுத்தியது. இவர்களுடைய எல்லை வடக்கே ஒரிசா வரையிலும் கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையும், தெற்கே மாலைத்தீவுகள் வரையிலும் விரிந்து இருந்தது. இராசராசன், தென்னிந்தியா முழுவதையும் வெற்றி கொண்டதுடன், தெற்கே இலங்கையின் வடக்குப் பகுதியையும், மாலத் தீவையும் கூடக் கைப்பற்றியிருந்தார். இராசேந்திரன் காலத்தில் சோழர் படை வட இந்தியாவிலுள்ள கங்கைக் கரை வரை சென்று பாடலிபுத்திரத்தின் மன்னனான மகிபாலனைத் தோற்கடித்தது. அத்துடன் சோழரின் கடற்படை மலாய் தீபகற்பத்திலுள்ள கடாரம், ஸ்ரீவிஜயம் மற்றும் சில நாடுகளையும் வென்றதாகத் தெரிய வருகிறது. பண்டைய கால (ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டதே "இந்தியா" எனும் சொல். அவ்வாறு உருவாக்கப்பட காரணம் அவர்களின் வியாபார மற்றும் ஆட்சி நிர்வாகத்திற்காக

நோக்கத்திற்காக)அரசர்களுள் கடல் தாண்டி கடற்படை மூலம் வெற்றி கொண்டவர்கள் சோழர்களே ஆவர்.

சோழர்களின் கொடி புலிக்கொடி. சோழர்களின் அடையாள முத்திரையான புலிச்சின்னம் அவர்களது கொடியிலும் பொறிக்கப்பட்டது. இப்புலிச் சின்னத்தைப்பற்றி பல இடங்களில் கூறும் இலக்கியங்கள், இதன் தோற்றத்தைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. சோழர் சூடும் மலர் ஆத்தி.

**சோழ நாடு**

தமிழ் மரபுகளின்படி பண்டைய சோழ நாடு தற்காலத் தமிழ் நாட்டின் நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. சோழநாடு, கடலை நோக்கிச் சரிந்து செல்கின்ற ஆனால் பொதுவாக, மட்டமான நில அமைப்பைக் கொண்டது. காவிரி ஆறும், அதன் கிளை ஆறுகளுமே சோழ நாட்டின் நிலத் தோற்றத்தின் முக்கியமான அம்சங்கள். பொன்னி என்றும் அழைக்கப்படுகின்ற காவிரி ஆற்றுக்குச் சோழநாட்டின் பண்பாட்டில் சிறப்பான இடம் இருந்தது. ஆண்டுதோறும் பொய்க்காது பெருகும் காவிரி வெள்ளம் சோழ நாட்டு மக்களுக்கு ஒரு விழாவுக்கான ஏதுக்களில் ஒன்றாக இருந்தது. ஆண்டு தோறும் கொண்டாடப்பட்ட ஆடிப்பெருக்கு விழாவில் அரசர்கள், ஆண்டிகள் எல்லோருமே பங்கு பெற்றனர்.

உறையூர் கி.பி 200 ஆம் ஆண்டுக்கு முன் சோழரின் தலை நகரமாக விளங்கியது. அகழிகளாலும், மதிலாலும் சூழப்பட்ட பாதுகாப்பான நகரமாக இது விளங்கியது. காவேரிப்பட்டினம் என்றும் அழைக்கப்பட்ட காவிரிப்பூம்பட்டினம் காவிரிக் கழிமுகத்துக்கு அண்மையில் அமைந்திருந்த ஒரு துறைமுக நகராகும். தொலமியின் காலத்திலேயே காவிரிப்பூம் பட்டினமும், நாகபட்டினமும் சோழநாட்டின் முக்கிய துறைமுக நகரங்களாகப் பெயர் பெற்றிருந்தன. இந்நகரங்களில் பல இன மக்கள் வாழ்ந்தனர். இவை வணிக மையங்களாக விளங்கிப் பல மதத்தவரையும் கவரும் இடங்களாக இருந்தன. பண்டைய ரோமர்களின் கப்பல்களும் இந்தத் துறைமுகங்களுக்கு வந்தன. கிறித்து சகாப்தத்தின் தொடக்க காலங்களைச் சேர்ந்த ரோமானிய நாணயங்கள் பல காவிரியின் கழிமுகப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சோழ நாட்டின் இன்னொரு முக்கிய நகரம் தஞ்சாவூர் ஒன்பதிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டு வரை சோழப்பேரரசின் தலைநகரமாக விளங்கியது. விசயாலய சோழன் தஞ்சையைத் தன் தலைநகரமாகத் தேர்ந்தெடுத்து வெற்றிகள் பல பெற்றான். பல்லவ

நாட்டைக் கைப்பற்றிய பிறகு காஞ்சியை இரண்டாம் தலைநகரமாகக் கொண்டு அவ்வப்போது சோழ அரசர்கள் அங்கிருந்தும் ஆட்சிப்பொறுப்பை கவனித்துவந்தனர். எனினும் தஞ்சையே முக்கிய நகரமாக விளங்கியது. சிறிது காலத்திற்குப் பின் தஞ்சை அதன் முதன்மை இடத்தை இழந்தது. இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் கங்காபுரி என்ற புதியதோர் நகரை உருவாக்கி அதைத் தன் தலை நகராகக் கொண்டான். பின்னர் பதினொன்று முதல் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை கங்கைகொண்ட சோழபுரம் தலைநகரமாக இருந்தது. 'சோழ கங்கம்' என்ற அழகிய பெரிய ஏரியைக் கொண்ட இந்நகர் பல நூற்றாண்டுகளாய் இராசேந்திரனின் பெருநோக்குக்கும் பெருமைக்கும் சின்னமாய் விளங்கி இருந்தது.

கும்பகோணத்தை அடுத்துள்ள பழையாறையில் ஒரு அரண்மனையும், முதலாம் இராசராசனுடைய பெயரிலேயே "அருள்மொழி தேவேச்சுரம்" என்ற கோவிலும் இருந்தது. இந்த அரண்மனையில் இராசராசனின் தமக்கை குந்தவை பல காலம் விரும்பித் தங்கியிருந்தாள் என்றும் இராசராசனும் சிலகாலம் தங்கியிருந்ததாகவும் கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன. முதலாம் இராசேந்திரன் மதுரையில் மிகப் பெரியதோர் அரண்மனை கட்டியதும் தவிர உத்திரமேரூர் போன்ற இடங்களிலும் சோழர் அரண்மனைகள் இருந்ததாகக் கல்வெட்டுக்களில் இருந்து அறிகிறோம். சாளுக்கிய சோழர்களின் காலத்தில், சிதம்பரம், மதுரை, காஞ்சிபுரம் ஆகியவையும் மண்டலத் தலை நகரங்களாக விளங்கின.

## சமூகநிலை

### சோழரும் சாதியமும்

சோழர்கள் சாதிய அடுக்கமைவையும் அமைப்பையும் ஏற்று, அதற்கு கட்டுப்பட்டு ஆட்சிபுரிந்தார்கள். இவர்கள் காலத்துக்கு முன்னரேயே தீட்டுக் கோட்பாடு தமிழ்ச் சமூகத்தில் வழங்கியதானாலும், இதை அமுல்படுத்துவதில் சோழரின் பங்கும் குறிப்பிடத்தக்கது. "முதலாம் இராசராசனுடைய கல்வெட்டொன்று 'தீண்டாச்சேரி' என ஒரு ஊர்ப் பகுதியைச் சுட்டுகிறது என்றும், பாகூரில் உள்ள திருமூலநாதர் திருக்கோவில் கல்வெட்டொன்று (முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்தது - கி.பி. 10 ஆம் நூற்றாண்டு) ஓர் ஊரில் வாழ்ந்த ஒரு மக்கள் பிரிவினரைத் 'தீண்டாதார்' எனக் குறிப்பிடுகின்றது என்றும் பேராசிரியர் கோ. விசயவேணுகோபால் விளக்குகிறார். மேலும் சோழர் காலத்தில்தான் இந்தத் தீண்டத்தகாதவர் 'சேரிகள்', அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ளன. மேடான இடத்தில் மேல் சாதியினரும், பள்ளமான

இடத்தில் கீழ்ச் சாதியினரும் குடியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் முற்றத்தில் வரும் மழைத்தண்ணீர் கூடத் தீட்டுப்படாததாய் இருக்கும். மேலும் குனிந்து போகும்படியாகத்தான் குடிசை கட்ட வேண்டும். ஜன்னல் வைத்துக் கட்டக் கூடாது. சுவருக்கு வெள்ளையடிக்கக் கூடாது. பிணத்தைச் சும்மாதான் எடுக்க வேண்டும். பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது. என்றெல்லாம் ஆணை போட்டு" அமுல்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆணைகள் அக்காலத்தில் நிலவிய அடக்குமுறைகளை எடுத்துக்காட்டுவதாக ஆய்வாளர் கூறுகிறார்கள்.[16] பிராமணர்களே சோழ நிர்வாகத்தின் முக்கியமான பதவிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். மற்றவர்கள் அவர்களுக்கு வேலை செய்தார்கள். பிராமணர்கள் அல்லாதோர் ஒன்றாகச் செயல்படுவதை தடுப்பதற்கு சாதிச் சார்பையும், சாதி ஒற்றுமையையும், சாதி சமூகங்களையும் பிராமணர்கள் ஊக்குவித்தார்கள்.

### பெண்டிர்

சமூக வாழ்வில் முழுப்பங்கும் ஏற்க பெண்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால் அடக்கமே, பெண்களின் தலைசிறந்த அணிகலனாகக் கருதப்பட்டது. பொதுவாகச் சொத்து வைத்துக் கொள்வதற்கும் அந்தத் சொத்துக்களைத் தாங்கள் விரும்பியபடி அனுபவித்து வரவும் அவர்களுக்கு உரிமை இருந்துவந்தது. அரசர்கள் மீது அரச குடும்பத்துப் பெண்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அரசர்களும் செல்வந்தர்களும் பல மனைவியரைத் திருமணம் செய்து கொண்டனர். ஆனால் பொதுவாக ஓர் ஆடவனுக்கு ஒரு மனைவி என்ற நியதியே பெருவாரியாக நடைமுறையில் இருந்து வந்தது. சிறந்த பயிற்சி தேவைப்படாத வேலைகளில் பெண்கள் அமர்த்தப்பட்டனர்.

### உடன்கட்டை ஏறுதல்

கணவரை இழந்த பெண் பிரிவாற்றாமல் உடன்கட்டை ஏறுவதைப் பற்றிச் சில கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சோழநாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகள் மிகக் குறைவாகவே நடந்தன. இது பரவலான வழக்கமாக இல்லை. முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில், வீரச் சோழ இளங்கோவேள் என்ற கொடும்பாளூர்ச் சிற்றரசனின் மனைவி கங்கா தேவியார் என்பவள் தீக்குளிக்குமுன் ஒரு கோயிலில் நந்தா விளக்கேற்ற நிவந்தங்கள் கொடுத்தாள் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராசராச பேரரசனின் தாயாரும் சுந்தர சோழனின் மனைவியுமான வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறிய செய்தி திருவாலங்காட்டுச் செப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. வீரமிக்க இந்தச்

செயலுக்காக, மக்கள் வானவன் மாதேவியாரைப் போற்றி வழிபட்டார்கள் என்றாலும் பின்பற்றவில்லை என்றே தெரியவருகிறது. வேறு எந்தச் சோழ அரசியும் உடன்கட்டை ஏறவில்லை. பொதுவாகப் பெண்கள் உடன்கட்டை ஏறும் முறைக்கு மக்களிடையே ஆதரவு இல்லாமல் இருந்தது அந்தக் காலத்தில் உடன் கட்டை ஏறத் துணிந்தவர்களை தடுத்தவர்களைப் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**ஆடல் வல்லார்**

சோழர் காலத்தில் ஆடலும் பாடலும் ஓங்கியிருந்தன.ஆடல் மகளிர் பிறரைக் கவரும் வகையில் திகழ்ந்தனர். பரதத்திலும் இசையிலும் நல்ல தேர்ச்சி பெற்று, திருக்கோயில்களில் தொண்டு புரிந்தாள். தான் விரும்பியவரை மணம் புரிந்து கொண்டாள். இவ்ர்களுக்குச் சமூகத்தில் மிகவும் மரியாதையும் சிறப்பும் வழங்கப்பட்டது. கோவில் நடனமாடும் கலை வளர்ச்சிக்குத் தங்கள் உயிர்களை அர்ப்பணித்த அக்காலத்திய தேவரடியார்கள், கிரேக்க நாட்டு ஆடற் பெண்டிர் போன்ற பண்புநலன் உள்ளவர்களாயும் கலையுணர்வு உடையவர்களாயும் திகழ்ந்தனர். கலை நுணுக்கங்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்குக் கண்ணுக்கும் செவிக்கும் நல் விருந்தளித்தனர். திருக்கோயில்களில் இறைத் தொண்டிற்காகவே பலர், தங்கள் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்களது வருவாயில் பெரும்பங்கு கோயில் வழிபாடு முதலிவற்றிற்காகவே செலவிடப்பட்டது என்று பின்னே வந்த முகமதிய எழுத்தாளர்கள் வியப்புடன் தெரிவிப்பதில் அறியலாம்.

சோழர் காலத்தில் தேவரடியார்கள் மதிப்பான இடம் பெற்றிருந்தனர் என்பது, சோழர் அவர்களுக்கு வழங்கியுள்ள ஏராளமான கொடைகளைப் பற்றிய கல்வெட்டுக்களைப் பார்த்தால் விளங்கும். இவர்கள் மணவாழ்க்கையிலும் ஈடுபட்டிருந்தனர். சதுரன் சதுரி என்னும் ஒரு தேவரடியாள் நாகன் பெருங்காடான் என்பவரின் மனைவி(அகமுடையாள்) என்று திருவொற்றியூர்க் கல்வெட்டு, கி.பி. 1049-ம் ஆண்டில் கூறுகிறது. அவ்வாறே தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு கோயிலில் பணிபுரிந்த தேவரடியாள் மணமானவள் என்பதை மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு தெரிவிக்கிறது.

**அடிமைகள்**

சோழர்காலத்தில் அடிமை முறை வழக்கத்தில் இருந்தது. அடிமைகளாகவே சிலர் வாழ்ந்துள்ளனர். சிலர் வரிகட்ட முடியாமல் தங்களைத் தாங்களே விற்றுக் கொண்டனர். தலைமுறை

தலைமுறையாகப் பணி செய்யவும் சிலர் விற்கப்பட்டனர். போரில் சிறைபிடிக்கப்பட ஆண்களும் பெண்களுமே பெரும்பாலும் பணியாளர்களாக அமர்த்தப்பட்டனர். போரிட்டு வென்ற வேற்று நாட்டிலிருந்து கொணர்ந்த பெண்கள் வேளம் என்ற மாளிகையில் குடியமர்த்தப்பட்டனர். சோழர்கள் வேளத்தில் (palace establishments) நூற்றுக்கணக்கான பெண்கள் அரசனினின் பாலியல் மற்றும் களியூட்டல் பயன்பாட்டுக்காக இருந்தார்கள். இங்கு ஆண் அடிமைகளும் வேலை செய்தார்கள். இதை பேராசிரியர் தாவுத் அலி அவர்கள் தனது "சோழர் காலக் கல்வெட்டுக்களில் வேழம் என்னும் சொல் பற்றிய ஆய்வு" என்ற ஆய்வுக்கட்டுரையில் விளக்கியுள்ளார்.

றொமிலா தபார் (Romila Thapar) என்று வரலாற்று அறிஞர் இந்தியாவின் வரலாறு (A History of India) என்ற தனது நூலில் சோழர்கள் அடிமைகள் வைத்திருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். அடிமைகள் தாமாகவோ அல்லது பிறராலோ அடிமைத்தனத்துக்கு விற்கப்பட்டார்கள். கோயில்களுக்கும் அடிமைகள் விற்கப்பட்டனர். பட்டினிக் காலத்தில் இது பெருமளவில் இருந்தது என்றும் குறிப்பிடுகின்றார். அடிமைகளின் எண்ணிக்கை சிறியது என்றும், பாரிய உற்பத்திகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

### சோழரின் வணிகம்

சோழர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகத்தில் சிறந்து விளங்கினர். சீனாவின் சோங் (Song) வம்சத்தின் குறிப்பொன்று, சோழ வணிகக் குழுவொன்று, கி.பி 1077 ஆம் ஆண்டில், சீன அரசவைக்குச் சென்றது பற்றிக் கூறுகின்றது. சுமத்ராத் தீவில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் சாசனப் பகுதியொன்று, சோழநாட்டு வணிகக் கணங்களில் ஒன்றாகிய நானாதேச திசையாயிரத்து ஐந்நூற்றுவர் பற்றிக் குறிப்பிடுகின்றது. இது 1088 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகும். இச் சாசனத்தின் கண்டுபிடிப்பு, சோழர் காலக் கடல்கடந்த வணிக முயற்சிகளுக்குச் சான்றாக அமைகின்றது.

### சோழர்காலப் பண்பாட்டு அம்சங்கள்

சோழர் காலத்தில் கலை, இலக்கியம், சமயம் முதலிய துறைகளில் பெரு வளர்ச்சி காணப்பட்டது. இத்துறைகள் எல்லாவற்றிலுமே பல்லவர் காலத்தில் தொடங்கப்பட்ட போக்குகளின் உச்ச நிலையாகச் சோழர் காலம் அமைந்தது எனலாம். சோழர் காலத்தைத் தமிழரின் செவ்வியல் காலம் (classical age) என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. எனினும் சங்க காலமே தமிழரின் செவ்வியல் காலம் என்ற கருத்தும் இருக்கின்றது.

பாரிய கோயில் கட்டிடங்களும், கற் சிற்பங்களும், வெண்கலச் சிலைகளும், இந்தியாவில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு நுண்கலைத் திறன் வாய்ந்தவையாக அமைந்தன. சோழருடைய கடல் வலிமையும், வணிகமும், அவர்களுடைய பண்பாட்டுத் தாக்கங்களைப் பல நாடுகளிலும் உண்டாக்கக் காரணமாயிற்று. தற்காலத்தில் தென்கிழக்காசியாவின் பல பகுதிகளிலும் எஞ்சியுள்ள இந்துப் பண்பாட்டுச் செல்வாக்குக்கான எடுத்துக்காட்டுகளில் பல சோழர் விட்டுச் சென்றவையே.

**கலைகள்**

சோழர்காலத்தில் கட்டிடக் கலை சிறப்புற்றிருந்தது. சோழர்களின் நகரம், உள்ளாலை, புறம்பாடி என்ற இரு பிரிவாக இருந்தது. நகரங்கள் மிகப்பெரியவை. பல மாடிவீடுகள் கொண்டவை. இன்ன இடத்தில் இன்ன வகையான வீடுகள் தான் கட்டலாம் என்றும், இன்னவர்கள் இத்தனை மாடிகளுடன்தான் வீடுகள் கட்ட வேண்டும் என்றும் விதிகள் இருந்தன. பல அங்காடிகள் இருந்தன. இவர்களின் கட்டடக்கலை உன்னதத்தை விளக்குவன சோழர் அமைத்த கோவில்களே ஆகும். சோழர்காலக் கட்டிடக்கலை, பல்லவர்கள் தொடக்கிவைத்த பாணியின் தொடர்ச்சியே ஆகும். விசயாலயன் காலத்திலிருந்தே சோழர்கள் பல கோயில்களைக் கட்டினார்கள் ஆனால், முதலாம் இராசராசனுக்கு முந்திய சோழர் காலக் கட்டிடங்கள் பெரியவையாக அமையவில்லை. பேரரசின் விரிவாக்கம் சோழநாட்டின் நிதி நிலைமையிலும், ஏனைய வளங்கள் தொடர்பிலும் வளர்ச்சியை ஏற்படுத்தியதால், இராசராசன் காலத்திலும் அவன் மகனான இராசேந்திர சோழன் காலத்திலும், தஞ்சைப் பெரிய கோயில் மற்றும் கங்கை கொண்ட சோழபுரம் கோயில் போன்ற, அளவிற் பெரிய கோயில்களைக் கட்ட முடிந்தது. கி.பி 1009 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட தஞ்சைப் பெரிய கோயில், சோழர்கள் காலத்தில் அடைந்த பொருளியல் மேம்பாட்டுக்கான பொருத்தமான நினைவுச் சின்னமாகும்.

சோழர் காலம், கல்லாலும் வெண்கலத்தாலும் ஆக்கப்பட்டச் சிலைகளுக்குப் பெயர் பெற்றது. இக் காலத்துக்குரிய, சிவனின் பல்வேறு தோற்றங்கள், விஷ்ணு, மற்றும் பல கடவுட் சிலைகள் தென்னிந்தியக் கோயில்களிலும், பலநாட்டு அரும்பொருட் காட்சியகங்களிலும் காணக் கிடைக்கிறது. இச்சிலைகள் பழங்காலச் சிற்பநூல்கள்களிலும், ஆகமங்களிலும் சொல்லப்பட்டுள்ள விதிப்படியே வார்க்கப்பட்டுள்ளன ஆயினும், 11 ஆம் 12 ஆன் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சிற்பிகள் இவற்றைச் சிறந்த கலை நுணுக்கத்துடனும், கம்பீரத்துடனும் உருவாக்குவதில் தங்கள்

சுதந்திரமான கைத்திறனையும் காட்டியுள்ளார்கள். இத்தகைய சிலைகளுள், ஆடல் கடவுளான நடராசப் பெருமானின் சிலைகள் குறிப்பிடத் தகுந்தவை ஆகும்.

**கல்வி**

சோழர் காலத்தில் கல்வி சமஸ்கிருத மொழியில் பிராமணர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. கோயில்களுடன் இணைந்திருந்த கல்விக்கூடங்களில் மிகவும் ஒழுங்கான முறையில் இந்தக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. இப்படி கல்வி பயின்றவர்களே சோழ அரசின் நிர்வாகத்துறையிலும் கோயில்களிலும் உள்வாங்கப்பட்டார்கள். இன்று போல் பொதுமக்களுக்கான கல்வி என்று எதுவும் இருக்கவில்லை. ஆனால், சமூகம் அல்லது சாதி சார்ந்த தொழில்துறைகளில், தொழில் பயிலுனர் (apprenticeship) முறைப்படி அறிவூட்டப்பட்டது.

**மொழி**

சோழர் காலத்தில் தமிழ் சிறப்புற்று இருந்தது. நிர்வாகம், வணிகம், இலக்கியம், சமயம் என்று பல தளங்களில் தமிழ் பயன்படுத்தப்பட்டது. சோழர்களின் கல்வெட்டுக்களும் பட்டயங்களும் பல தமிழிலேயே அமைந்துள்ளன. இருப்பினும் "அவற்றின் மெய்கீர்த்திகளில் சமற்கிருத ஆட்சியே மேலோங்கி நின்றது".

**இலக்கியம்**

சோழர் காலம், தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்பானதொரு காலமாகும்.இக்காலத்தில் இலக்கிய வளர்ச்சி மிகுந்திருந்தது. ஆனால் சோழர்களால் தமிழ், உயர் கல்வி கூடங்களில் ஊக்குவிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சோழர் காலக் கல்வெட்டுக்களில் பல இலக்கியங்கள் குறிப்பிடப் பட்டுள்ளனவாயினும், அவற்றுட் பல தற்காலம் வரை நிலைத்திருக்கவில்லை. இந்து சமய மறுமலர்ச்சியும், ஏராளமான கோயில்களின் உருவாக்கமும், இருந்த இந்துசமய நூல்களைத் தொகுப்பதற்கும், புதியவற்றை ஆக்குவதற்கும் உந்துதலாக இருந்தன. இராசராச சோழன் காலத்தில்தேவாரம் முதலிய நூல்கள் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. சமண, பௌத்த நூல்களும் இயற்றப்பட்டன. ஆயினும் அவை சோழருக்கு முற்பட்ட காலத்தை விடக் குறைவாகவே இருந்தன. திருத்தக்க தேவர் என்பவரால் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணியும், தோலாமொழித் தேவரால் இயற்றப்பட்ட

சூளாமணியும், இந்து சமயம் சாராத முக்கியமான சோழர்கால இலக்கியங்களாகும்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த கம்பர் தமிழில் மிகச் சிறந்த இலக்கியமாகக் கருதப்படும் கம்பராமாயணத்தை எழுதினார். வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவி இது எழுதப்பட்டதாக இருந்தாலும், கம்பர் இதைத் தமிழ் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ப ஆக்கியுள்ளார். செயங்கொண்டாரரின் கலிங்கத்துப்பரணியும் இன்னொரு சிறந்த இலக்கியம். இரண்டாம் குலோத்துங்க சோழன் பெற்ற கலிங்கத்து வெற்றியை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது இந்நூல். இதே அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் குலோத்துங்க சோழ உலா என்னும் நூலையும் தக்கயாகப் பரணி, மூவருலா என்ற நூல்களையும் இயற்றியுள்ளார். மேலும் சேக்கிழாரின் பெரிய புராணமும் இக்காலத்ததே. சோழ்ர் காலத்தில்தான் திருப்பாவை, திருவெம்பாவை போன்றவை சோழ நாடெங்கும் ஓதப்பட்டன. சோழர் காலத்தில் இலக்கிய வளர்ச்சி உச்சத்தை எட்டியது.

சைவ சித்தாந்த நூல்களும் இக்காலத்தே மலர்ந்தன. மெய்கண்டார் சிவஞானபோதம் என்ற நூலை இயற்றினார். வாகீச முனிவரின் ஞானாமிர்தம், திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் எழுதிய திருவுந்தியார், அருள்நந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞான சித்தியார், உமாபதிசிவாச்சாரியாரின் எட்டு நூல்கள் என சைவ சித்தாந்த அறிவு சோழர் காலத்தில் உருவாகி முறையான வடிவம் பெற்றது.

**சமயம்**

சோழர் இந்து சமயத்தை, சிறப்பாகச் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாவர். எனினும் பிற மதங்களையும் ஆதரித்தனர். சைவம், வைணவம் என்ற இரு மதங்களும் சோழர் காலத்தில் சிறந்திருந்தது. ஏராளமான சைவ, வைணவ மடங்களும் கோவில்களும் அமைக்கப்பட்டன. அவற்றிற்கு சாற்று முறை செய்ய வரியில்லா நிலங்கள், பணியாளர்கள் எனப்பெரும் பொருள் செலவிடப்பட்டது. இம்மடங்களில் உணவிடுதல், வழிப்போக்கருக்கு உப்பு, விளக்கெண்ணெய் வழங்குவது, நோய்க்கு மருத்துவம் செய்வது ஆகியன் மேற்கொள்ளப்பட்டன. மக்களின் சிந்தனை பக்திநெறியில் செல்ல இவை வழிவகுத்தன. சாளுக்கிய சோழர்கள் சிலர் வைணவர் பால், சிறப்பாக இராமானுசர் தொடர்பில் எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடித்ததாகத் தெரிகிறது. இது தொடர்பிலேயே அதிராசேந்திர சோழன் மரணம் அடைந்ததாகச் சிலர் கூறுகிறார்கள்.

# பாண்டியர்

பாண்டியர்கள் பழந்தமிழ் நாட்டை ஆண்ட வேந்தர்களுள் ஒருவராவர். மற்ற இரு வேந்தர்கள் சேரர்களும் சோழர்களும் ஆவர். பாண்டியர்கள் மதுரை, இராமநாதபுரம்,திருநெல்வேலி மற்றும் தற்போதைய கேரளத்தின் தென்பகுதி ஆகியவற்றை ஆட்சி செய்தனர். இந்தியாவில் எந்த ஒரு மன்னர் குலத்துக்கும் இல்லாத நெடிய வரலாறு பாண்டியர்களுக்கு உண்டு.

தெற்குப் பகுதியில் களப்பிரர் ஆட்சியை வீழ்த்திய பெருமை பாண்டிய மன்னன் கடுங்கோன் (560–590) என்பவரைச் சாரும்.[52] கடுங்கோன் மற்றும் அவரது மகன் மாறவர்மன் அவனிசூளாமணி பாண்டியர்களின் ஆட்சிக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். பாண்டிய மன்னன் சேந்தன் தனது ஆட்சிக் காலத்தில் ஆற்றலை சேர நாடு வரைக்கும் விரிவாக்கினார். இவரது மகன் அரிகேசரி பராந்தக மாறவர்மன் (c. 650–700) நீண்டகாலம் செழிப்பாக ஆட்சி செய்தார். அவன் பல போர்களின் மூலம் பாண்டியர்களின் ஆற்றலை விரிவாக்கினான். பாண்டியர்கள் பண்டைய காலத்திலிருந்தே புகழ்பெற்றவர்கள். பதின்மூன்றாம் நூற்றாண்டில், அப்போதிருந்த பேரரசுகளில் மிகவும் செல்வமிக்க பேரரசு என்று மார்க்கோ போலோ பாண்டிய பேரரசைக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் ரோமன் பேரரசு வரையிலான பரவலான தொடர்புகளுடன் இருந்தனர், அத்தொடர்புகள் அரசியல் நயமிக்கவையாகவும் இருந்தன.

தங்கள் ஆட்சி எல்லையை விரிவாக்கிய பின்னர், சில ஆண்டுகள் கழித்து பல்லவர் ஆட்சிக்கு பல்வேறு இடையூறுகளை பாண்டிய பேரரசு விளைவித்தது. பாண்டிய மன்னர் மாறவர்மன் இராசசிம்மா சாளுக்கியர் மன்னர் இரண்டாம் விகுரமாதிதியனுடன் கூட்டணி வைத்து பல்லவ அரசர் இரண்டாம் நந்திவர்மனைத் தாக்கினர். காவிரிக் கரையில் நடந்த போரில் முதலாம் வரகுனன் பல்லவர்களைத் தோற்கடித்தார். பாண்டியர்களுக்கு அதிகரித்து வரும் ஆற்றலை தடை செய்வதற்காக பல்லவ மன்னர் நந்திவர்மன், கொங்கு மற்றும் சேர நாடுகளின் தலைவர்களுடன் கூட்டணி வைத்துக் கொண்டார். போர்வீரர்கள் பலமுறைப் போரிட்டுக் கொண்டாலும் இறுதியில் பாண்டிய மன்னர்களின் படையே வெற்றி பெற்றது. பாண்டியர்கள் ஶ்ரீமாற ஶ்ரீவல்லபா என்பவரின் துணையுடன் இலங்கை மீது படையெடுத்து 840 ஆம் ஆண்டில் வடக்குப் பகுதிகளை அழித்தனர்.

ஶ்ரீமாறாவின் துணையுடன் பாண்டியர்களின் ஆட்சி ஆற்றல் தொடர்ந்து வளர்ந்தது. பல்லவர்களின் பல்வேறு பகுதிகள் பாண்டியர்களின்

கட்டுப்பாட்டில் வந்தன. வடக்கில் தக்காண பீடபூமியின் சாளுக்கியர்களை தோற்கடித்த இராட்டுரகுடாசு அமைப்புகளால் தற்போது பாண்டியர்களுக்கு நெருக்கடி அதிகமானது. கங்கை மற்றும் சோழர்களின் துணையுடன் மூன்றாம் நந்திவர்மன் என்ற அரசனை பல்லவர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு சுரீமாறாவை தெள்ளாறு போரில் தோற்கடித்தனர். பல்லவர்களின் பேரரசு வைகை ஆறு வரை மீண்டும் நீண்டது. பல்லவ அரசன் நரிபதுங்க என்பவரால் அரிசில் என்ற இடத்தில் பாண்டியர்கள் தோற்கடிக்கப்பட்டனர் (c.848). பல்லவர்களின் மேலாளுமையை பாண்டியர்கள் பிறகு ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

### குடும்பவியல்

அரசன், அரசி, இளவரசன், பட்டத்தரசி என்ற முறையில் குடும்பம் அமைந்தது. பாண்டிய அரசன், வேந்தன் எனப்பட்டான். பட்டத்தரசி, பாண்டிமாதேவி எனப்பட்டாள். சில பாண்டிய அரசர்கள், பட்டத்தரசியை அன்றி பிற பெண்களையும் மணந்திருந்தனர். புராணங்களின் படி பெண்களும் முடிசூடி ஆட்சி நடத்தியதோடு போரும் செய்திருக்கின்றனர். அரசனின் மூத்த மகனே இளவரசு பட்டம் பெற இயலும். இதனால், மாற்றாந்தாய் மக்களுடன் பகைமை வருதலும் உண்டு. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மகன்கள் வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் ஆகிய பாண்டிய வேந்தர்களின் வரலாறுகள் இதற்குச் சான்றாகும்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தன் ஊழ்வினையால், கண்ணகி நீதி கேட்டதால் இறந்தான். அந்நேரம், இளவரசனாக கொற்கையில் இருந்த வெற்றுவேற்செழியன், மதுரைக்கு வந்து முடிசூடினான். ஐந்து பேர் ஒரே காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட நிலையும் இருந்தது. ஆட்சியின் காரணமாக அண்ணன் தம்பி, தந்தை மகன் கருத்து வேறுபாடுகள் வந்தபோது, ஆட்சிக்காக தந்தையை மகன் கொன்ற ஒரு நிகழ்வு பிற்காலப் பாண்டியரின் வரலாற்றில் இருந்தது.

### அரசியல் ஆட்சி இயல்

பாண்டியரின் ஆட்சிக்கு உற்ற துணையாக இருந்தவர்கள் அமைச்சர்கள். அடுத்த நிலையில் அரசியல் அதிகாரிகள், படைத் தலைவர்கள் இருந்தனர். அரையர், நாடுவகை செய்வோர். வரியிலார், புரவுவரித் திணைக்களத்தார், திருமுகம் எழுதுவோர் ஆகியவர்களும் அரசனுக்கு ஆட்சியில் துணை செய்தவர்கள் ஆவார்கள்.

1-அரையர் உள்நாட்டுப் பணி புரியும் நாட்டதிகாரிகள் ஆவார்கள்.இவர்கள்,நாட்டைச் சுற்றி வந்து,குடிமக்கள் குறை கேட்டு நீதி வழங்குவர்.

2-நாடுவகை செய்வோர் ஊரில் உள்ள நிலங்களில் அளந்து பணி செய்வர்.

3- வரியிலார் அனைத்து வகையிலும் ஊர் மக்கள் அரசுக்கு வரி செலுத்துவதை கணக்கு வைப்பார்கள்.

4-புரவு வரித்திணைக் களத்தார் வட்டாட்சியர்போல் செயல்படுபவர்கள்.

**அரசின் வரி**

பாண்டியர் காலத்தில் வரியை இறை என்றழைத்தனர்.இறை பெறுதல்முறை என்பது வழக்கத்திலிருந்துவந்தது.குடிகள் அரசனுக்கு நிலவரி கொடுத்தனர்.விளைநெல்,காசு, பொன் வரியாகக் கொடுத்தனர்.ஊர்த் தலைவர்கள் மக்களிடம் பெற்று அரசிடம் அளித்தனர்.தளியிறை,செக்கிறை,தட்டார்ப் பட்டம்,இடைவரி சான்று வரி,பாடிகாவல்,மனையிறை,உல்கு முதலான வரி முறைகள் இருந்தன.இறை,பாட்டம் என்பன வரியினை உணர்த்தும் சொற்களாகத் திகழ்ந்தன.தட்டார்ப் பாட்டம் கம்மாளரின் வரியாகும்.நாடு காவலையே பாடி காவல் என்றழைக்கப்பெற்றது.ஊர்க்காவலிற்கு வாங்கிய வரியே இப்பெயர்பெற்றது.பாண்டிய அரசர்களுள் சில அரசர்களும் ஊர்க்காவலிற்குச் சென்றனர்.பொற்கைப்பாண்டியன் இதற்குச் சான்றாக விளங்குகின்றான்.வீட்டு வரியினை மனை இறை என்றழைத்தனர்.கலத்தினும்,காலினும் வரும் பொருள்களுக்கு வாங்கும் வரியே சுங்க வரி எனப்படும்.உல்குவின் பொருள் இதுவேயாகும்.

**நில அளவியல்**

ஊர்தோறும் உள்ள நிலங்களை அளந்து வரி விதிக்கப்பட்டது.பாண்டிய நாடு முழுவதும் அளக்கப்பட்டது.நாடு வகை செய்வோர் அளந்தனர்.நிலத்தினை அளக்கும் கோல் 'சுந்தர பாண்டியன் கோல்' என்ற பெயரைக் கொண்டிருந்தது. 24 அடி கொண்ட தடியாகும் இக்கோல்.குடிதாங்கிக் கோலும் அளவு கோலாக புழக்கத்தில் இருந்தது.நிலங்களை குழி,மா,வேலி என்று பெயரிட்டு அளந்தனர்.அளந்த நிலத்திற்கு எல்லைக் கல் நாட்டனர்.இக்கற்களே புள்ளடிக் கற்களாகும்.சிவன் கோயில்களிற்கு இடப்பட்ட நிலத்திற்கு திரிசூலக்கல்

நடப்பட்டது.திருமால் கோயிலுக்கு இடப்பட்ட நிலத்திற்கு திருவாழிக்கல் நடப்பட்டது.நீர் நிலம் நன்செய் எனவும் மேட்டு நிலம் புன்செய் என அழைக்கப்பட்டது.நத்தம்,தோட்டம் என்ற வழக்கும் புழக்கத்தில் இருந்தது.

**இறையிலி**

இறைவன் கோயிலுக்கு அளிக்கப்படும் கொடை இறையிலி என அழைக்கப்பட்டது.சிவன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட இறையிலி தேவதானம் என அழைக்கப்பெற்று திருமால் கோயிலுக்கு அளிக்கப்பட்ட இறையிலிக்கு திருவிடையாட்டம் என்று பெயர்.சைன, பௌத்த கோயில்களுக்கு அளிக்கப்பட்ட கொடை பள்ளிச்சந்தம் என அழைக்கப்பட்டது.அந்தணர்களுக்கு வழங்கப்பட்டது பிரமதேயம்;பட்டவிருத்தி எனவும்,மடங்களுக்கு வழங்கப்பட்டது மடப்புறம் எனவும் புலவர்களுக்கு முற்றூட்டும்,சோதிடர்களுக்கு கணிமுற்றூட்டும் எனவும் கொடைகள் அழைக்கப்பட்டன.

**அளவை இயல்**

எண்ணல்,எடுத்தல்,முகத்தல்,நீட்டல் ஆகிய நான்கு அளவைகள் பாண்டியர் ஆட்சியிக் காலங்களில் புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன.எடுத்தல் என்பது நிறுத்தல் ஆகும்.பொன், வெள்ளி, கழஞ்சு, காணம் ஆகிய நிறை கற்களால் நிறுத்தனர்,சர்க்கரை, காய்கறிகள், புளி ஆகியவற்றை துலாம்,பலம் என்பவற்றால் நிறுத்தனர்.சேர் ,மற்றும் மணங்காலும் நிறுக்கப்பட்டன. நெல், அரிசி, உப்பு, நெய், பால், தயிர், மிளகு, சீரகம், கடுகு ஆகியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி போன்ற முகறும் கருவிகளால் அளக்கப்பட்டன்.

இவ்வாறான அளவு முறைகள் பாண்டிய நாட்டில் இருந்தன,சங்க காலம் முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை இவ்வளவு முறை புழக்கத்தில் இருந்திருக்கின்றது.14 ஆம் நூற்றாண்டு முதல் புதிய அளவு முறைகள் வந்தன குறிப்பிடத்தக்கது.

**நாணய இயல்**

பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் மன்னர்களின் பெயராலும்,சிறப்புப் பெயராலும் நாணயங்கள் வெளியிடப்பட்டன. பொன், செம்பால் செய்யபட்ட காசுகள் புழக்கத்தில் இருந்தன.மீன் சின்னம் பொருத்தப் பட்டதாக வெளியிடப்பட்டது பாண்டியர் ஆட்சிக் கால நாணயங்கள். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டென மதிக்கப்படும் முத்திரை காசுகள், கி.மு.3-2ஆம்

நூற்றாண்டென மதிக்கப்பெறும் பெருவழுதி நாணயம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

சீமாறன் சீவல்லபவன் - அவனிப சேகரன் கோளலிக என்ற பெயரில் நாணயம் வெளியிட்டான்.இதற்குச் சான்றாக சிற்றண்ண வாசல் கல்வெட்டு விளங்குகின்றது.முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோணாடு கொண்டான் நாணயம் வெளியிட்டான் சீவல்லபன் "அவனிப சேகரன் கோளகை" என்ற பெயரில் வெளியிட்டான்.1253 ஆம் ஆண்டில் வீரபாண்டியன் "வாளால் வழி திறந்தான் குளிகை" என்ற பெயரில் நாணயத்தினை வெளியிட்டான்.காசு என்பது ஒரு கழஞ்சு எடை உடையது 10 பொன் கொண்டது ஒரு காசு 10 காணம் - 1 கழஞ்சு ஒரு காணம் 4 குன்றி 'காசும் பொன்னும் கலந்து தூவியும்' என்ற தொடர் இதனை உணர்த்துகின்றது.காணம்,கழஞ்சு,காசு,

**ஊரவை**

பாண்டியர் ஆட்சியில் ஊர் தோறும் ஊரவை இருந்துவந்தது.ஊராட்சியினை இது செயல்பட வைத்தது.குடவோலை முறையில் ஊர்த் தலைவரை தேர்ந்தெடுத்தனர்.சிற்றூர் பல சேர்ந்து கிராம சபை அமைத்தனர்.நிலமும், கல்வியும், மனையும்,அறநெறியும் உடையவர்கள் மட்டுமே ஊரவை உறுப்பினர்களாக முடுயும்.ஊர்களிற்குப் பொது மன்றங்கள் இருந்தன.அரசு அதிகாரிகளின் மேற்பார்வையில் ஊரவை நடைபெற்றது.நீதி விசாரணைக்கு ஊரவையில் உட்கழகங்கள் இருந்தன.வாரியங்கள் என்ற பெயரில் இவை அமைந்தன. அவை பின்வருமாறு:-

சம்வற் சரவாரியம் - நீதி வழங்கும்,அறநிலையங்களை கண்காணிக்கும்.

ஏரிசவாரியம் - நீர் நிலை,பாசனம் கண்காணிப்பது.

தோட்ட வாரியம் – நிலங்களை அளப்பது,கண் காணிப்பது.

பொன் வாரியம் – நாணயங்களை வெளியிடுவது,கொடுப்பது.

பஞ்சவாரியம் – குடிமக்களிடம் வரிபெற்று அரசுக்கு அளிக்கப்படுவது.

அவை உறுப்பினர் பெருமக்கள்,ஆளுங்கணக்கர் என்றழைக்கப்பட்டனர்.இவர்கள் ஓராண்டு ஊதியமின்றி பணிபுரிவர்.ஊர் மன்றங்களிலும்,கோயில் மண்டபங்களிலும் ஊரவை கூடும்.புதிய விதிகளை அமைக்கும் உரிமை ஊரவைக்கு இருந்தது.

**ஆவணக்களரி இயல்**

பதிவு அலுவலகம் பாண்டியர் காலத்தில் ஆவணக்களரி என்றழைக்கப்பட்டது.ஒவ்வோர் ஊரிலும் எழுதப்பட்ட ஆவணங்களைக் காப்பிட ஆவணக்களரி இருந்தது.இதனை ஆவணக்களம் என்றழைத்து வந்திருக்கின்றனர். இப்பகுதிக்குப் பொதுவாக நிலம் விற்போர் வாங்குவோர் சென்று தம் நிலத்திற்கு உரிய விலை,பரப்பு,நான்கெல்லை குறிக்கப்படும்.விற்போர் உடன்பட்டு உறுதிமொழியில் கையொப்பம் இடவேண்டும்,ஆவணங்களை கோவில் சுவரில் பொறித்து வைப்பதும் உண்டு.ஆவணக்களரி மக்களின் உரிமைக்கும்,சொத்துக்கும் பாதுகாப்புத் தருவதாக அமைந்திருந்தன.மக்கள் பயன்கருதி பாண்டியர் ஆட்சி நடைபெற்ற அனைத்து ஊர்களிலும் இது செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

**வணிகவியலும் தொழிலியலும்**

பாண்டிய நாட்டில் கடைச்சங்க நாளிலேயே வணிகமும் தொழிலும் மிகச்சிறப்பாக இருந்தன.மதுரை, கொற்கை முதலான நகரங்களில் கிடைத்துள்ள உரோமாபுரி நாணயங்களே இதற்குச் சான்றாகும்.

வெளிநாட்டு வணிகங்கள் சிறப்புற்றும் உள்நாட்டில் பண்டங்களை எடுத்துச் செல்வதற்கேற்ற பெருவழித் தடங்களும் இருந்தன.நாடு முழுதும் இச்சாலைகள் அமைந்திருந்தன.

வணிகர்கள் கோவேறு கழுதை, மாட்டு வண்டிகளில் பண்டங்களை ஏற்றிச் சென்றனர்.வழியில் களவு போகாமல் இருக்க காவற்படைகள் இருந்தன.வணிகர்கள் கூட்டமாகச் செல்வதனை வணிகச்சாத்து என அழைத்தனர்.வணிகரில் சிறந்தோர் 'எட்டி' என்றழைக்கப்பட்டனர். பாண்டி நாட்டு கொற்கைப் பெருந்துறையில் முத்துக்களும்,சங்குகளும் பெருவாரியாகக் கிடைத்தன.கொற்கை முத்து உலகெங்கும் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

**பல்வகைத் தொழில்கள்**

பாண்டிய நாட்டில் முத்துக் குளித்தல்,சங்கறுத்தல்,வளையல் செய்தல்,உப்பு விளைவித்தல்,நூல் நூற்றல்,ஆடை நெய்தல்,வேளாண்மை செய்தல்,ஆடு,மாடு மேய்த்தல் போன்ற பல தொழில்களும் செய்து வந்தனர்.மதுரையில் நுண்ணிய பருத்தி நூலினாலும்,எலி மயிரினாலும்,பட்டு நூலினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன.

முத்து, பவளம், மிளகு,பலவகை பட்டாடைகள் மேனாடுகளுக்கு அனுப்பப்பட்டன.மேனாடுகளிருந்து குதிரைகளும்,மது வகைகளும்,கண்ணாடிப் பொருள்களும் கொற்கைத் துறைமுகத்திற்கு வந்திறங்கின.சுங்க வரியினால் ஆண்டுதோறும் அரசுக்கு அதிக வருவாய் கிடைத்தது.கப்பல்கள் திசைமாறாமல் இருக்க துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்தது.வெளிநாட்டு வணிகர்களும் யவனர்களும் (கிரேக்கர்களும்,உரோமர்களும்),சோனகரும் (அரேபியர்கள்),பாண்டிய நாட்டு மக்களுன் அன்புடன் பழகினர் என்பது குறிப்பிடத்தக்கது.வணிகத்திலும்,கைத்தொழிலிலும் சிறந்து விளங்கிற்று பாண்டிய நாடு.பண்டைக் காலத்தில் தமிழகத்தின் பாண்டி நாட்டில் தான் வணிகமும்,வெளிநாட்டார் தொடர்பும் சிறப்புற்று இருந்தது.

**கல்வி இயல்**

பாண்டிய நாடு சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையைப் பெற்றிருந்தது.புலமை நலம் சான்ற முடிமன்னர்களும் இருந்தனர்.ஆண், பெண் இருபாலரும் கல்வி கற்றனர்.கல்வியின் சிறப்பை நெடுஞ்செழியன் போல் யாரும் பாண்டியராட்சியில் கூறியதில்லை எனலாம். நெடுஞ்செழியன் கல்வியில் வல்லமை பெற்று விளங்கியிருந்தான்.அகநானூறு தொகுப்பித்த உக்கிரப்பெருவழுதி குறிஞ்சி, வருதம் பாடுவதில் வல்லவனாக விளங்கினான்.சங்க காலப் புலவர்களிலும் மேலாக கவிதை பாடிய பாண்டிய மன்னர்களும் ஆட்சி புரிந்தவர்கள் என்பதனை இவர்கள் மூலம் அறியலாம்.பாண்டியர்களும் மதுரைத் தமிழ்ச் சங்கமும் தலைச்சங்கம் தொடங்கி கடைச்சங்கம்வரை தமிழ் எழுச்சியும்,வளர்ச்சியும் பெற்றது.இன்றைய மதுரையில் பாண்டியர் கடைச்சங்கம் வைத்து தமிழை வளர்த்தனர்.

செந்தமிழ்நாடு என்று பாண்டிய நாட்டை மட்டுமே இளங்கோவடிகள், சேக்கிழார், கம்பர் ஆகியோர் கூறியுள்ளனர்.தொல்காப்பியம், திருக்குறள் அரங்கேற்றப்பட்டது இங்கென்பது குறிப்பிடத்தக்கது.தமிழ்த்தொண்டெனில் அது பாண்டி மண்டலந்தானாகவிருந்தது.பாலாசிருயர்,கணக்காயர் தமிழ் கற்பித்தனர்.ஆசிரியர் புலவராகவும் இருந்தனர்.குருவே தெய்வம் என்றனர்.பாண்டிய நாட்டில் குலவேறுபாடு இன்றி கல்வி கற்றனர்.கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது பாண்டிய நாட்டில் நிலவியது.

**ஆன்மீக இயல்**

உமையாள் மதுரை மீனாட்சியாக வந்து பாண்டியன் மகளாகப் பிறந்தாள் என்றும் பின்னர் சோமசுந்தரப் பெருமானை மணந்தாள் என்றும்

பாண்டி நாட்டை சோமசுந்தரர் ஆண்டார் என்று புராணங்கள் கூறும்.பாண்டிய வரலாற்றினைக் கூறும் இலக்கிய நூற்களிலும் இவ்வாறு ஆட்சி செய்தார்கள் எனச் சான்றுகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.பாண்டியர் ஆட்சியில் சைவ சமயமே தழைத்தோங்கியிருந்தது. ஆனாலும் வைணவம், சமணம், புத்த மதம் போன்ற பிற மதங்களும் இருந்தன.சிவன் கோயிலில் விண்ணகரங்கள், அருகன் கோட்டங்கள், புத்த பள்ளிகள் போன்றனவையும் அடங்கியிருந்தன.அனைத்து மதத்திற்கும் மதிப்பளிக்கப்பட்டிருந்தன. கோயில்களுக்கு நிபந்தங்கள்,இறையிலிகள் விடப்பட்டன.பாண்டிய அரசர்கள்,அமைச்சர்,அதிகாரிகள், மேற்பார்வையில் கோயில்கள் கட்டப்பெற்றன.சங்க காலத்தில் சமயப் பூசல்கள் தோற்றம் பெறவில்லை.17 ஆம் நூற்றாண்டு கால கட்டத்தில் சமயப் பூசல்கள் தோற்றம் பெற்றன.மன்னர்களும்,அமைச்சர் மற்றும் அதிகாரிகளும் பிறந்த நாளில் கோயில்களில் விழா எடுத்து மகிழ்ந்தனர்.அதற்கென நிலம் அளிக்கப்பட்டன.தேவாரம், திருவாய் மொழிகள் போன்றன ஓதப்பட்டன.இயல், இசை, நடனம், கூத்து முதலியன நடைபெற்றன.செங்கற் கோயில்கள், கற்றளிகள்,செப்புத் திருமேனிகள் கல்படிமங்கள்,அமைக்கப்பட்டு அணிகலன்களை வழிபாடு செய்யத் தானம் செய்தனர்.கோயில் வழிபாட்டுத் தலமாக அன்றி பொருள், பணம் சேர்த்து வைக்கும் இடமாகவும் விளங்கியது.கோயிலின் பொதுப்பணம் மக்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது.தினமும் கோயில்களில் அன்னதானம் வழங்கப்பட்டது.புத்தகசாலைகள் கோயில்களில் அமைக்கப்பெற்றிருந்தன.கோயில் காரியங்களை ஊர் அவையோரும் அதிகாரிகளும் செய்தனர்.கோயில் மற்றும் அறநிலையங்கள் திட்டப்படி நடக்கின்றனவா என கவனிக்கப்பட்டன.தவறுகள் இழைப்போர் தண்டனையும் பெற்றனர்.கோயிலில் அமைந்த கல்வெட்டுக்கள் வரலாற்று ஏடுகளாக அமைந்திருந்தன.கோயில் புதுப்பிக்கும் சமயம் படியெடுத்துவைத்துப் புதுப்பித்தனர்.மீண்டும் அவை பொறிக்கப்பட்டன.

**பாண்டியர் பழக்க வழக்கங்கள்**

மன்னன் மகன்,பெயரன் என்ற முறையில் முடிசூடினர்.சிங்காதனங்களுக்கு மழவராயன் காலிங்கராயன் முனையதரையன்,தமிழ்ப் பல்லவராயன் என்று பெயரிடப்பட்டனர்.அரசன் பிறப்பிக்கும் ஆணை திருமுகம்,ஓலை மூலம் மக்களுக்கு அனுப்பப்படும்.அரசர்கள் பிறந்த நாள் விழா நடத்தினர்.போரில் இறந்த வீரர்களின் குடும்பத்திற்கு உதிரப்பட்டி என்ற இறையிலி நிலம் அளிக்கப்பட்டது.பாடிய புலவர்களுக்குப் பொன்னும், பொருளும் பரிசாக அளிக்கப்பட்டன.நீதி தவறாது செங்கோல் முறை கோடாது

வழங்கப்பட்டன.நீதியை நிலைநாட்ட கை குறைத்தும்,உயிர் கொடுத்தும் காத்தனர் சில பாண்டியர்கள்.நீதி காக்க பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் கொடுத்தான்.பொற்கைப் பாண்டியன் நீதிக்குத் தன் கையை வெட்டிக் கொண்டான்.தினமும் மக்கள் குறைகேட்கும் வழக்கம் இருந்தது.போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும்,பாராட்டும் செய்யப்பட்டன.காசுகள் வெளியிடப்பட்டன.பிறவிப் பெருங்கடல் நீந்த நாளும் இறைவனை வழிபட்டனர்.அறம் ஈகையாக,நீதியாகக் காக்கப்பட்டது."மழை வளம் சிறக்க!மண்ணுயிர் வாழ்க! மன்னனும் வாழ்க!" என்று வாழ்த்தும் வழக்கமும் இருந்து வந்தது.இடுவதும்,சுடுவதும் இறந்தோர்க்கு உண்டு!முன்னோடு வழிபடும் வடிக்கமும் இருந்திருந்தன. பல நல்ல பண்புகளையுடைவர்களாக பல பாண்டிய மன்னர்கள் திகழ்ந்திருந்தனர்.